தூத்துக்குடி மாநகராட்சி

Phone No. 0461- 2326901-903 Email. commr.thoothukudi@tn.gov.in

# சாதாரணக் கூட்டப்பொருள்

2009ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு 2008ஆம் வருடத்திய தூத்துக்குடி மாநகராட்சி சட்டம் அட்டவணை I பிரிவு எண் 3(1)ன் கீழ் தூத்துக்குடி மாநகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

**26–2–2009 அன்று நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் ஒத்திவைக்கப்பட்ட பொருள்**

தூத்துக்குடி மாநகராட்சிப் பகுதி டூவிபுரம் 5வது தெருவில் அமைந்துள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சங்கரநாராயணபிள்ளை பூங்கா மேம்பாடு செய்யப்பட்டால் அப்பகுதி மக்களும், சிறுவர்களும், மாணவர்களும் பயனடைவார்கள் என்றும், மேற்படி பூங்காவினை பராமரிப்பு பணி மேற்கொள்ள பெல் மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகம் ஆர்வமுடையதாக உள்ளது என்றும், மாநகராட்சி சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு மேற்படி பூங்காவினை பராமரிப்பு செய்ய அனுமதி வழங்குமாறும் தூத்துக்குடி பெல் மெட்ரிகுலேஷன் பள்ளி தாளாளர் 13–10–2008ஆம் தேதிய கடிதத்தில் அனுமதி கோரியுள்ளார்.

மேற்படி பூங்காவினை பராமரிப்பு செய்ய மேற்படி பள்ளி நிர்வாகத்திற்கு நடைமுறையில் உள்ள மாநகராட்சி நிபந்தனைகளுக்குட்பட்டு அனுமதி வழங்குவது தொடர்பாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** . பூங்கா பராமரிப்பு நிபந்தனைகளுக்குட்பட்டு பராமரிப்பு செய்து கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

இ5. 27784/09

**தீர்மானம் எண்: 77**

இப்பொருள் குறித்து பல்வேறு தரப்பினரிடமிருந்து ஆட்சேபனைகள் வரப்பெற்றதால் இப்பொருள் ரத்து செய்யப்படுவதுடன் தொடர்ந்து மாநகராட்சி நிர்வாகம் மூலம் பூங்கா பராமரிப்புப் பணிகள் மேற்க்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது.

2. ஆணையர் தூத்துக்குடி மாநகராட்சி அவர்களின் ஏப்ரல் 2009 மாதத்திய அலுவலக நாட்குறிப்பு மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** – பதிவு செய்யலாம்.

சி1 /09

**தீர்மானம் எண்: 78**

பதிவு செய்யப்பட்டது.

3. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தினந்தோறும் மாநகராட்சிப் பகுதியிலுள்ள குப்பைகளை அப்புறப்படுத்த லாரிகள், டிப்பர் லாரிகள் மற்றும் டிராக்டர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வாகனம் முழுவதும் குப்பைகளை ஏற்றி உரக்கிடங்கிற்கு எடுத்து செல்லும் வழிகளில்

குப்பைகள் கீழே விழுவதால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுகிறது. எனவே குப்பைகள் வாகனங்கள் ஓட்டும் போது கீழே விழாமல் இருக்க நைலான் வலைகளை கொண்டு மூடி கொண்ட செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவிலுள்ள எட்டு வாகனங்களுக்கு நைலான் வலைகள் வாங்க உத்தேச செலவுத்தொகை ரூ 4800/– (ரூபாய் நாலாயிரத்து எண்ணூறு மட்டும்) ஆகும். செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்.

எச்1. 2280/2009

**<u>தீர்மானம் எண்: 79</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

4. மதுரை ஆர். ஆர். சி என்ற நிறுவனம் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளிகளுக்காக முன் வைப்புத்தொகையாக ரூபாய் 2400/–யை மாநகராட்சி கருவூலத்தில் 2004ஆம் வருடத்தில் செலுத்தியுள்ளார்கள். அத்தொகையை திரும்ப வழங்க கேட்டுள்ளார்கள். மேற்படி நிறுவனம் செலுத்திய முன் வைப்புத்தொகை காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளதால் அத்தொகையை வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

பி3/ 10893/08

**<u>தீர்மானம் எண்: 80</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

5. மதுரை இந்தியன் ஏஜென்சீஸ் உரிமையாளர் தனது நிறுவன ஒப்பந்தப்புள்ளிகளுக்காக இம்மாநகராட்சிக்கு 1996ஆம் வருடத்தில் முன் வைப்புத்தொகையாக ரூபாய் 2400/– செலுத்தியுள்ளார். அன்னார் செலுத்திய முன் வைப்புத்தொகை காலங்கடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. அத்தொகை திரும்ப வழங்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

பி3/ 2751/09

**<u>தீர்மானம் எண்: 81</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

6. இம்மாநகராட்சி நகராட்சியாக செயல்பட்ட பொழுது மாநகராட்சி வாகனம் டிஎன்ஜ 9481ன் வாகன ஓட்டுநரால் ஏற்பட்ட விபரத்து சம்பந்தமாக தூத்துக்குடி விரைவு விசாரணை நீதிமன்றம் எண் II இல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு எண் எம்.ஏ.சி.ஓ.பி எண் 181/99ன் 12–8–2003 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில்1ம் எதிர் மனுதாரர் மாநகராட்சி தரப்பில் விபரத்தில் இறந்தவரின் குடும்பத்திற்கு நஷ்ட ஈடாக ரூ 2,00,000/– த்தை 12–10–2003ஆம் தேதிக்குள் வழங்க வேண்டுமென்றும், அத்தொகைக்கு மனுதாக்கல் செய்த தேதி 14–6–1999 முதல் தொகை செலுத்தும் நாள் வரை 9 % பின் வட்டியும் செலுத்த வேண்டுமென்று உத்திரவிடப்பட்டுள்ளது.

அதன்படி இந்நகர்மன்ற தீர்மான எண் 424 நாள் 22–9–2003ன்படி இவ்வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பினை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மாநகராட்சியால் தாக்கல் செய்யப்பட்ட C.M.P.No. 6644-04 In C.M.A No. 1145-04 வழக்கின் தடை உத்திரவுப்படி ரூ **2,00,000/–** நீதிமன்றத்தில் **30–3–2004**இல் வைப்பீடு செய்யப்பட்டு மேற்படி மேல் முறையீடு வழக்கு நிலுவையில் இருந்து வந்தது.

இந்நிலையில் மனுதாரரால் மீண்டும் தூத்துக்குடி விரைவு விசாரணை நீதிமன்றம் எண் II இல் பின் வட்டி **14–6–1999** முதல் **5–4–2004** வரையுள்ள காலங்களுக்கு ரூ **86,550/–** மற்றும் செலவுத்தொகை சேர்த்து ரூ 94,826/– வழங்க கோரி E.P. 21/08 in M.AS.C. OP **181/99** என்ற

எண்ணில் நிறைவேற்று மனு தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வந்தது. இம்மாநகராட்சி தரப்பில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல் முறையீடு வழக்கு எண் **1145/04**ன் **19–12–2008**ஆம் தேதிய இறுதி தீர்ப்பில் தீர்ப்பாய நீதிமன்றம் ரூ **2,00,000/–** விதித்ததை உறுதி செய்து மேல் முறையீடு மனுவை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அம்மேல் முறையீடு மனு தள்ளுபடி செய்யப்பட்ட நிலையில் மனுதாரர் தாக்கல் செய்த நிறைவேற்று மனுவின் மீது நீதிமன்றம் பிறப்பித்த உத்திரவில் மனுவில் கண்டுள்ள தொகை மற்றும் செலவுத்தொகை சேர்த்து ரூ **1,34,090/–** செலுத்தவும் தவறினால் ஜப்தி நடவடிக்கை மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே இவ்வழக்கின் அவசர அவசியம் கருதி நீதிமன்ற நடவடிக்கையை தவிர்க்கும் பொருட்டு ரூ 1,34,090/–ஐ நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ததையும் மேற்படி நிறைவேற்று மனு மீது பிறப்பிக்கப்பட்ட உத்திரவினை மறு பரிசீலனை மனு தாக்கல் செய்யவும், மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மறு பரிசீலனை மனு தாக்கல் செய்யப்பட்டதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலகக் குறிப்பு

மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

சி3./2035/08

**<u>தீர்மானம் எண்: 82</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

7. இம்மாநகராட்சி பொது சுகாதாரம் மலேரியா பிரிவில் கொசு ஒழிப்பு புகை மருந்து 1 முதல் 51 வார்டுகளிலும் 2009 ஏப்ரல் 16 முதல் மே 15 வரை தெளிக்க வேண்டியுள்ளது. அதற்கான எரிபொருள் டீசல் – 650 லிட்டர் மற்றும் பெட்ரோல்– 125 லிட்டர் தேவைப்படுகிறது. அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ 30,000/–ஐ அவசர அவசியம் கருதி பொது நிதியிலிருந்து செலவு செய்ய மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலகக் குறிப்பு

அவசர அவசியம் கருதி மாமன்ற அனுமதியை எதிர்நாக்கி மேற்காண் செலவினத்தை மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

எச்3. 1437/08

**<u>தீர்மானம் எண்: 83</u>**

அலுவலகக் குறிப்புப்படி அங்கீகரிக்கப்பட்டது

8. இம்மாநகராட்சி ஆணையர் அவர்கள் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகத்திற்கு பாதாளச் சாக்கடை மற்றும் இதர திட்டங்கள் சம்பந்தமாக நடத்தப்பட்ட ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ள சென்னை சென்று வந்தமைக்கு ரூ 3956/–க்கான பயணப்பட்டியல் சமர்ப்பித்துள்ளார்கள். இப்பயணத்திற்கு முன்பணம் ஏதும் வழங்கப்பெறவில்லை. எனவே பயணப்பட்டியல் தொகை ரூ 3956/–ஐ ஆணையர் அவர்கள் பெயரில் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலகக் குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் 7456/09/பி4

**<u>தீர்மானம் எண்: 84</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

9. இம்மாநகராட்சிக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை 2009–2010ஆம்ஆண்டுக்கு அனுபவிக்கும் உரிமைக்கான ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 22–4–2009, 28–4–2009 மற்றும் 6–5–2009 ஆகிய தேதிகளில் மாநகராட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றதில் கீழ்க்கண்டவாறு கலம் எண் 1இல் கண்ட ஏல இனத்திற்கு கலம் 2இல் கண்ட நபர்கள் கொடுத்த கலம் எண் 5இல் கண்ட உயர்ந்த ஏலக்கேள்வி மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண் 11367/2009/ஆர்3 நாள் 16–4–2009இன்படி நிறுவப்பட்டுள்ள குழுவின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்பட்டு மேற்படி குழு கலம் எண் 6இல் அனுமதிக்கப்பட்ட வரிசை எண் 1 முதல் 28 முடிய வரிசை எண் 30 முதல் 33 முடிய மற்றும் 35, 36ல் கண்டுள்ள ஏல

இனங்களுக்கு 2009–2010ஆம் வருடம் உரிமம் வழங்கியதற்கும், மாமன்றத்தின் பின்னேற்பிற்கு வரிசை எண் 29ஐ மறு ஏலம் கொண்டு வரவும் மற்றும் வரிசை எண் 34இல் கண்டுள்ள பூங்காவில் பராமரிப்பு பணி நடைபெறுவதாலும் மற்றும் மகசூல் இனம் ஏதும் இல்லாததால் இந்த இனத்தினை நீக்கம் செய்யவும் மாமன்றத்தின் பின்னேற்பிற்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

| ஏல இன வரிசை எண் | பெயர் மற்றும் முகவரி | மூன்றாண்டு சராசரி தொகை | கடந்த ஆண்டு சராசரி தொகை | 2009–10ஆம் ஆண்டின் உச்ச கேள்வித் தொகை | குறிப்புரை |
|---|---|---|---|---|---|
| 1. வஉசி சந்தை உரிமம் | திரு கே. சிம்சன் 79ஏ, எஸ்பிஜி கோவில் தெரு, தூத்துக்குடி | 759763 | 834400 | 840900 | அனுமதிக்கப்பட்டது |
| 2. எஸ்.எஸ் சந்தை உரிமம் | திரு ஆர். சந்திரசேகர் த/பெ ராமசாமி 57/13 தெற்கு வாணியன் விளை, தூத்துக்குடி | 79867 | 90000 | 96300 | அனுமதிக்கப்பட்டது |
| 3. சிதம்பரநகர் சந்தை உரிமம் | திரு எஸ். வேலு த/பெ சங்கரன் 55சி டுவிபுரம் 2வது தெரு, தூத்துக்குடி | 246267 | 251500 | 253700 | அனுமதிக்கப்பட்டது |
| 4. கீழரதவீதி சந்தை உரிமம் | திரு கே. பாஸ்கர் 1, பொன்னகரம், தூத்துக்குடி | 79937 | 82200 | 85300 | அனுமதிக்கப்பட்டது |
| 5. கோபால்சாமி சந்தை உரிமம் | திரு எஸ் வேல்ராஜ் 34, சேதுராஜா தெரு, தூத்துக்குடி | 81700 | 89900 | 92500 | அனுமதிக்கப்பட்டது |
| 6, தச்சர் தெரு சந்தை உரிமம் | திருமதி ஜே நிர்மலா 93ஐ/26சி அசோக்நகர் 7ம் தெரு, தூத்துக்குடி | 21433 | 23500 | 26400 | அனுமதிக்கப்பட்டது |
| 7. புதிய பேரூந்து நிலையம்–பேருந்து நுழைவு கட்டண உரிமம் | திரு பி. பிரசன்னா பிரபு 16ஏ அம்மன் கோவில் தெரு பிரையண்ட்நகர், தூத்துக்குடி | 788833 | 792000 | 795300 | அனுமதிக்கப்பட்டது |
| 8. புதிய பேரூந்து நிலைய சைக்கிள் உரிமம் | திரு சுப்புகுட்டி 36 கோபால்சாமி தெரு, தூத்துக்குடி | 264933 | 313300 | 317700 | அனுமதிக்கப்பட்டது |
| 9. புதிய பேரூந்து நிலைய கட்டண கழிப்பறை உரிமம் | திரு ஜே.வி. சுரேஷ்குமார் 44, திரவியபுரம் தெரு, தூத்துக்குடி | 106133 | 110200 | 114500 | அனுமதிக்கப்பட்டது |
| 10.புதிய பேரூந்து நிலைய தலைச்சுமை பூ உரிமம் | திரு டி. மனோகர்ராஜ் 84/2 கிழக்கு தெரு பண்டாரம்பட்டி | 14300 | 15500 | 16800 | அனுமதிக்கப்பட்டது |
| 11. புதிய பேரூந்து நிலைய தலைச் சுமை வளையல் உரிமம் | திரு ஆர். சின்னதம்பி 1/19/1 மீனாட்சிபுரம் கிழக்கு தூத்துக்குடி | 39436 | 46000 | 47250 | அனுமதிக்கப்பட்டது |
| 12. புதிய பேரூந்து நிலைய தலைச்சுமை மூலம் செய்தி தாள் உரிமம் | திரு டி மனோகர்ராஜ் 84/2 கிழக்கு தெரு, பண்டாரம்பட்டி | 27367 | 30000 | 31400 | அனுமதிக்கப்பட்டது |
| 13. புதிய பேரூந்து நிலைய எடைபார்க்கும் இயந்திரம் உரிமம் | திரு சி. சேர்மபாண்டி, 47ஏ தாமோதர்நகர், தூத்துக்குடி | 3267 | 3500 | 4400 | அனுமதிக்கப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 14. பழைய பேரூந்து நிலைய கட்டண கழிப்பறை உரிமம் | திரு பி. மோசஸ் ராபின்சன் 3/45, பெரிய நாயகபுரம், கோரம்பள்ளம், தூத்துக்குடி | 662133 | 663200 | 665200 | அனுமதிக்கப்பட்டது |
| 15, பழைய பேரூந்து நிலைய கட்டண கழிப்பறை உரிமம் | திரு டி அந்தோணிராஜ் 1/9 டூவிபுரம் 6ம் தெரு, தூத்துக்குடி | 215567 | 220000 | 221500 | அனுமதிக்கப்பட்டது |
| 16, பழைய பேரூந்து நிலைய சைக்கிள் உரிமம் | திரு சி. சேர்மபாண்டி, 47ஏ தாமோதர்நகர், தூத்துக்குடி | 167600 | 198100 | 204201 | அனுமதிக்கப்பட்டது |
| 17, பழைய பேரூந்து நிலைய தலைச்சுமை பூ உரிமம் | திரு ஆர். தனமுருகேசன் 1/316பி, மீளவிட்டான் சின்னக்கண்ணுபுரம், தூத்துக்குடி | 81000 | 83000 | 87800 | அனுமதிக்கப்பட்டது |
| 18. பழைய பேரூந்து நிலைய தலைச்சுமை செய்தி தாள் உரிமம் | திரு ஆர். சங்கரராமன் 74, வாடித்தெரு, தூத்துக்குடி | 16233 | 17500 | 18750 | அனுமதிக்கப்பட்டது |
| 19, பழைய பேரூந்து நிலைய தலைச்சுமை வளையல் உரிமம் | திரு ஜி குருசாமி 30/பி 9 அண்ணாநகர் 3ம் தெரு, தூத்துக்குடி | 23471 | 29000 | 30500 | அனுமதிக்கப்பட்டது |
| 20, பழைய பேரூந்து நிலைய எடைபார்க்கும் இயந்திரம் உரிமம் | திரு சி. சேர்மபாண்டி, 47ஏ தாமோதர்நகர், தூத்துக்குடி | 4350 | 4600 | 5500 | அனுமதிக்கப்பட்டது |
| 21, தெற்கு காட்டன் ரோடு கழிப்பறை உரிமம் | திரு டி. செபஸ்தியான் 5/49, பீச் ரோடு, தூத்துக்குடி | 109600 | 113200 | 115500 | அனுமதிக்கப்பட்டது |
| 22. மாசில்லாமணி பூங்கா கழிப்பறை உரிமம் | திரு எ. மனோகரன் 5/1 டேவிஸ்புரம், தூத்துக்குடி | 39050 | 42000 | 43200 | அனுமதிக்கப்பட்டது |
| 23, ராஜாஜி பூங்கா கழிப்பறை உரிமம் | திரு ஆர். சின்னத்தம்பி 1/19/1 மீனாட்சிபுரம் கிழக்கு, தூத்துக்குடி | 174067 | 179000 | 180250 | அனுமதிக்கப்பட்டது |
| 24. வட்டத்தெப்பம் கழிப்பறை உரிமம் | திரு எஸ். கணேசன் 60சி/4எச், பூபாலராயர்புரம், தூத்துக்குடி | 137600 | 141000 | 143300 | அனுமதிக்கப்பட்டது |
| 25. ஜெயராஜ் ரோடு சைக்கிள் உரிமம் | திரு எஸ். வேலு த/பெ சங்கரன் 55சி டூவிபுரம் 2ம் தெரு, தூத்துக்குடி | 145067 | 171600 | 189100 | அனுமதிக்கப்பட்டது |
| 26. அண்ணா பேரூந்து நிலைய தங்கும் விடுதி | திருமதி ஆர். முத்துலெட்சுமி 135/5 போல்பேட்டை, தூத்துக்குடி | 60200 | 55000 | 60500 | அனுமதிக்கப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 27. நவீன ஆட்டிடைச்சாலை உரிமம் | திரு ஆர். கண்ணன் த/பெ ராமசாமி மேலத்தெரு, பண்டாரம்பட்டி, தூத்துக்குடி | —— | 210056 | 202300 | அனுமதிக்கப்பட்டது |
| 28, மாநகராட்சிப் பகுதியில் வெட்டப்படும் ஆடுகளுக்கு கட்டண வசூல் உரிமம் | திரு டி. மனோகர்ராஜ் 84/2, கிழக்குத்தெரு, பண்டாரம்பட்டி, தூத்துக்குடி | —— | 251143 | 255500 | அனுமதிக்கப்பட்டது |
| 29, மாநகராட்சி மாடு அடிக்கும் இடத்தில் கட்டண வசூல் உரிமம் | ஏலம் கோர எவரும் முன் வரவில்லை | —— | —— | ஏலம் கோர எவரும் முன் வரவில்லை | மறு ஏலம் கொண்டு வரப்பட்டது |
| 30, 15 இடங்களில் விளம்பர உரிமம் | திரு ஆர். சின்னத்தம்பி 1/19/1 மீனாட்சிபுரம் கிழக்கு, தூத்துக்குடி | —— | —— | 7250 | அனுமதிக்கப்பட்டது |
| 31. 7 இடங்களில் விளம்பர உரிமம் | திரு ஆர். சின்னத்தம்பி 1/19/1 மீனாட்சிபுரம் கிழக்கு, தூத்துக்குடி | —— | —— | 4100 | அனுமதிக்கப்பட்டது |
| 32, 5 இடங்களில் விளம்பர உரிமம் | திரு ஆர். சின்னத்தம்பி 1/19/1 மீனாட்சிபுரம் கிழக்கு, தூத்துக்குடி | —— | —— | 4100 | அனுமதிக்கப்பட்டது |
| 33. சேதுபாதை மயானத்தில் பனை மர உரிமம் | திருகே. பாஸ்கர் 1, பொன்னகரம், தூத்துக்குடி | 7900 | —— | 8200 | அனுமதிக்கப்பட்டது |
| 34, ராஜாஜி பூங்காவில் மரங்களின் மகசூல் அனுபவிக்கும் உரிமம் | | | | ஏலம் கோர எவரும் முன் வரவில்லை | பூங்காவில் பராமரிப்பு பணி நடைபெறுவதாலும் மகசூல் இனம் ஏதும் இல்லாததால் இந்த இனம் மாமன்ற ஒப்புதல் பெற்று நீக்கம் செய்ய தீர்மானிக்கப்பட்டது |
| 35. வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் பனைமரங்களில் மகசூல் அனுபவிக்கும் உரிமம் | | 1900 | —— | 3600 | அனுமதிக்கப்பட்டது |
| 36. வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தில் பனை மரங்களைத் தவிர இதர மரங்களின் மகசூல் அனுபவிக்கும் உரிமம் | | 13800 | —— | 20100 | அனுமதிக்கப்பட்டது |

## அலுவலகக் குறிப்பு

1) சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை எண் 11367/09/R3 நாள் **16–4–2009**ன்படி இம்மாநகராட்சி தலைமை பணியாளர்களை கொண்ட குழு அமைக்கப்பட்டு அக்குழுவின் ஒப்புதலுடன் மாமன்ற பின்னேற்பை எதிர்நோக்கி **2009–2010** வருடத்திற்குரிய உரிமம் வழனகப்பட்ட வரிசை எண் **1** முதல் **28** முடிய, வரிசை எண் **30** முதல் **33** முடிய மற்றும் **35, 36** கண்டுள்ள ஏல இனங்களுக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.
2) வரிசை எண் **29**இல் கண்டுள்ள ஏல இனத்தினை மறு ஏலம் கொண்டு வர மாமன்றம் அனுமதி வழஙகலாம்.
3) வரிசை எண் 34இல் கண்டுள்ள ஏல இனமான ராஜாஜி பூங்காவில் பராமரிப்பு பணி நடைபெறுவதாலும் மகசூல் இனம் ஏதும் இல்லாததால் அந்த இனத்தினை நீக்கம் செய்ய மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

அ16– 1059/2009

**<u>தீர்மானம் எண்: 85</u>**

அலுவலகக் குறிப்பு 1 பின்னேற்பு வழங்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 2 அனுமதி வழங்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 3 அனுமதி வழங்கப்பட்டது

10. இம்மாநகராட்சி பாளையங்கோட்டை ரோடு வணிக வளாக கடை எண் 10ஐ உரிமம் பெற்ற திரு சகாயராஜ் என்பவர் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவை ரூ 2,43,893/–ஐ செலுத்தாததால் அதன் உரிமத்தினை ரத்துச் செய்ய வருவாய் ஆய்வர் பிரிவு 1 பரிந்துரை செய்துள்ளார்.

மேற்படி பரிந்துரையின் பேரில் பாளையங்கோட்டை ரோடு வணிக வளாக கடை எண் 10ஐ பூட்டி சீல் வைக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி கடையின் உரிமத்தினை ரத்துச்செய்து மறு ஏலம் விடவும், மேற்படி கடைக்குரிய வாடகை நிலுவை ரூ 2,43,893/–க்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் அன்னாரால் செலுத்தப்பட்டடெபாசிட் தொகையை பறிமுதல் செய்து வாடகை பாக்கிக்கு ஈடு செய்யவும் அது வகைக்குரிய செலவுத்தொகையை பொது நிதியிலிருந்து செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

## அலுவலகக் குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/ 9676/07

**<u>தீர்மானம் எண்: 86</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

11. தூத்துக்குடி மாநகராட்சி 12 வது நிதிக்குழு **2007–08**ஆண்டிற்கு இம்மாநகராட்சி Data Base மற்றும் மின்சார வாரியத்திற்கு பாக்கித்தொகை செலுத்துவதற்கு **2403190/–** நிதி ஒதுக்கீடு மன்றம் தனது தீர்மான எண் **648** நாள் **31–1–2007** மற்றும் **154** நாள் **31–3–2008**ஆகிய தேதிகளில் கீழ்க்கண்ட பணிகள் செய்வதற்கும், அனுமதிக்கப்பட்ட தொகைக்கு மேல் கூடுதல் செலவினம் பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட பணிகளுக்கு மாமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட மொத்த தொகைக்குள் செலவு செய்யப்பட்ட விபரம் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வஎண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | செலவு செய்யப்பட்ட தொகை |
|---|---|---|---|
| 1 | கணனி பராமரிப்பு மற்றும் அலுவலகத்திற்கு ஜெனரேட்டர் வாஙகும் வகைக்கு | **10.50** | **10.38** |
| 2 | பிரிவு வாரியாக அலுவலக உபயோகத்திற்கு புதிதாக 11 எண்ணஙகள் கணனிகள் பிரிண்டர்கள் மற்றும் UPS வாஙகும் வகைக்கு | **4. 40** | **3.95** |

| | | | |
|---|---|---|---|
| 3 | Server மற்றும் UPS வாங்கும் வகைக்கு | 2. 00 | 2. 90 |
| 4 | கணனிகளுக்கு டேபிள், சேர் வாங்கும் வகைக்கு | 0. 25 | 0.66 |
| 5 | அனைத்து கணனிகளுக்கும் Online வசதி மற்றும் மின் இணைப்பு செய்ய | 0. 50 | 0. 09 |
| 6 | அலுவலக உபயோகத்தில் லேப் டாப் வாங்கும் வகைக்கு | 0. 40 | 0. 37 |
| 7 | கணனி அறை தடுப்புச்சுவர் ( Aluminium Portion அமைக்கும் பணி | 1. 30 | 1. 30 |
| 8 | மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டண பாக்கித்தொகை | 8. 88 | 8. 88 |
| | | **28. 23** | **28. 53** |

## அலுவலகக் குறிப்பு

மாமன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் இ1. 21306/07

**<u>தீர்மானம் எண்: 87</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

12. இம்மாநகராட்சியில் பொது நிதி திட்டத்தின் கீழ் போல்டன்புரம்,சுப்பையாபுரம்,அரசு மருத்துவமனை பின்புறம் உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு கீழ் கண்ட விபரப்படி செலவிடப்பட்ட தொகை ரூ4400/— என்ந்த்ரால் கம்யுனிகேஷன்ஸ் (பி) லிமிட் சென்னை அவர்களுக்கு வழங்கியதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | பத்திரிக்கை பெயர் | விளம்பர தேதி | வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | பிசினஸ்ஸ்டாண்டர்டு | 27.01.09 | ரூ4400/— |
| 2 | மதுரை மணி | 27.01.09 | |

அ.கு: அனுமதி எதிர் நோக்கி செலவிடப்பட்ட தொகைக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்

**ம.ப.எண்200/08-09**

**<u>தீர்மானம் எண்: 88</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

13. இம்மாநகராட்சியில் கல்வி நிதி திட்டத்தின் கீழ் வடக்கு பத்திரகாளிஅம்மன் கோவில் மாநகராட்சி பள்ளி புதிய கட்டடம் கட்டுவதற்கு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு கீழ் கண்ட விபரப்படி செலவிடப்பட்ட தொகை ரூ6711/— க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | பத்திரிக்கை பெயர் | விளம்பர தேதி | வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | தினத்தந்தி | 24.12.08 | ரூ1992/— |
| 2 | தினமணி | 24.12.08 | ரூ4719/— |

அ.கு: அனுமதி எதிர் நோக்கி செலவிடப்பட்ட தொகைக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ1/857/08**

**<u>தீர்மானம் எண்: 89</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

14. இம்மாநகராட்சியில் 12 வது நிதிக்குழு பரிந்துரை திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள குப்பை அள்ள மூன்று சக்கர இழுவை சைக்கிள்கள் மற்றும் டம்பர் பிளேசர் பின் ஆகியன வாங்குவதற்கு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு கீழ் கண்ட விபரப்படி செலவிடப்பட்ட தொகை ரூ8189/— என்ந்த்ரால் கம்யுனிகேஷன்ஸ் (பி) லிமிட் சென்னை அவர்களுக்கு வழங்கியதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | பத்திரிக்கை பெயர் | விளம்பர தேதி | வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1<br>2 | பைனான்சியல்எக்ஸ்பிரஸ்<br>மதுரை மணி | 20.01.09<br>20.01.09 | ரூ8189/— |

**<u>அ.கு:</u>** அனுமதி எதிர் நோக்கி செலவிடப்பட்ட தொகைக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ1/26600/08**

**<u>தீர்மானம் எண்: 90</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

15. இம்மாநகராட்சியில் 2008-09 உள்கட்டமைப்பு ஈடுசெய் நிதியின் கீழ் மாநகருக்கு வரும் குடிநீர் 1வது பைப் லைன் (புதுக்கோட்டை அருகில்) மாற்றி அமைக்கும் பணி மேற்கொள்ள கோரப்பட்ட மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு கீழ் கண்ட விபரப்படி செலவிடப்பட்ட தொகை ரூ21114/— என்ந்த்ரால் கம்யுனிகேஷன்ஸ் (பி) லிமிட் சென்னை அவர்களுக்கு வழங்கியதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | பத்திரிக்கை பெயர் | விளம்பர தேதி | வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1<br>2 | பைனான்சியல்எக்ஸ்பிரஸ்<br>மாலை மலர் | 12.02.09<br>12.02.09 | ரூ21114/— |

அ.கு: அனுமதி எதிர் நோக்கி செலவிடப்பட்ட தொகைக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ1/18217/08-7**

**<u>தீர்மானம் எண்: 91</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

16. இம்மாநகராட்சி பகுதியில் உள்ள குடிநீர் மெயின் குழாய் மற்றும் பகிர்மான குழாயில் ஏற்படும் கசிவுகளை சரி செய்ய நடமாடும் குடிநீர் கசிவு சரி செய்யும் வாகனம் (Blue Brigade) ஒன்று பகுதி 2 திட்டத்தின் கீழ் வாங்குவதற்கு கோரப்பட்ட ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு விளம்பரம் செய்த வகைக்கு கீழ் கண்ட விபரப்படி ,செலவிடப்பட்ட தொகை ரூ5317/— என்த்ரால் கம்யுனிகேஷன்ஸ் (பி) லிமிட்டெட் சென்னை அவர்களுக்கு வழங்கியதற்கு மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | பத்திரிக்கை பெயர் | விளம்பர தேதி | வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1<br>2 | பிசினஸ்ஸ்டாண்டர்டு<br>மதுரை மணி | 22.12.08<br>22.12.08 | ரூ5317/— |

அ.கு: அனுமதி எதிர் நோக்கி செலவிடப்பட்ட தொகைக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்

**<u>இ1/14819/08</u>**

**<u>தீர்மானம் எண்: 92</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

17. இம்மாநகராட்சியில் ஒருங்கிணைந்த நகர்ப்புற குடிசை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் குடிசை பகுதிகளை மேம்படுத்தும் விதத்தில் மழைநீர் வடிகால் கட்டுதல், தார் சாலை மற்றும் சிமென்ட் சாலை அமைத்தல்,சமுதாயக்கூடம் கட்டுதல்,ஆகிய பணிகளுக்கு கோரப்பட்ட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு & ஒப்பந்தப்புள்ளி கால நீட்டிப்பு விளம்பரம் செய்த வகைக்கு கீழ் கண்ட விபரப்படி செலவிடப்பட்ட தொகை ரூ244270/—ஐ என்ந்த்ரால் கம்யுனிகேஷன்ஸ் (பி) லிமிட் சென்னை அவர்களுக்கு வழங்கியதற்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ.எண் | பத்திரிக்கை பெயர் | விளம்பர தேதி | வழங்கப்பட வேண்டிய தொகை |
|---|---|---|---|
| 1 | பைனான்சியல்எக்ஸ்பிரஸ் | 21.02.09 & 27.2.09 | ரூ205155/— |
| 2 | தின மலர் | 21.02.09 & 27.2.09 | ரூ39115/— |

அ.கு: அனுமதி எதிர் நோக்கி செலவிடப்பட்ட தொகைக்கு மாமன்றம் அனுமதிக்கலாம்

**இ1/6385/06**

**<u>தீர்மானம் எண்: 93</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

18. இம்மாநகராட்சியின் உபயோகத்திற்கு 2008—09ஆம் ஆண்டில் பதிவேடுகள், படிவங்கள் மற்றும் எழுதுபொருட்கள் வாங்கவும் அச்சிட்டு பெறவும் உத்தேச செலவினம் மன்றத் தீர்மான எண் 152 நாள் 31—3—2008இல் ரூ 6,00,000/— அனுமதிக்கப்பட்டது. மேலும் கூடுதல் செலவினமாக ரூ 4,00,000/— மன்ற தீர்மான எண் 219 நாள் 30—12—2008இல் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே 2009—2010ஆம் ஆண்டிற்கு தேவையான பதிவேடுகள், படிவங்கள், எழுதுபொருட்கள் வாங்கவும் அச்சிட்டு பெறுவதற்கும், உத்தேச செலவினம் ரூ 11,00,000/—க்கு மாநகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

## அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மாநகராட்சிக்கு தேவையான பதிவேடுகள், படிவங்கள் மற்றும் எழுதுபொருட்கள் கூட்டுறவு நிறுவனங்களில் வாங்குவதற்கும் அச்சிட்டு பெறுவதற்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

நகஎண் பி7. 2653/09

**<u>தீர்மானம் எண்: 94</u>**

அலுவலகக் குறிப்புப்படி 1, 2 அனுமதிக்கப்பட்டது

19. இம்மாநகராட்சியில் உள்ள அனைத்து அறைகளிலும் உள்ள பூட்டுகள் வாங்கி 15 வருடங்களுக்கு மேல் ஆகி விட்டது அதனால் சரியாக பூட்ட முடியாமல் உள்ளது அனைத்து அறைகளையும் பூட்டி பாதுகாக்கும் பொருட்டு மொத்தம் 17 பூட்டுகள் வாங்கி வேண்டியுள்ளது.

மேற்படி பூட்டுகள் வாங்கும் பொருட்டு விலைப்புள்ளி பெற்று அதன்படி குறைந்த விலைப்புள்ளியின் நிறுவனத்தினரிடமிருந்து மொத்த பூட்டுகள் 17 எண்ணங்கள் வாங்கவும், அதற்கான செலவு ரூ 3400 மற்றும் அதற்கான போர்டு தயாரிக்க ரூ 600/— ஆக மொத்தம் ரூ.4000/— செலவுத்தொகை அனுமதிக்கவும் மாமன்ற ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம்
மாமன்ற அனுமதியை எதிர்நோக்கி மேற்படி செலவினம்
மேற்கொண்டதை அங்கீகரிக்கலாம்.

சி4. 2652/09

**<u>தீர்மானம் எண்: 95</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

20. இம்மாநகராட்சிப் பகுதி வார்டு எண் 42, டி.எம்.பி. காலனி சாலையில் உள்ள தெரு விளக்கு மின் கம்பம் 6 எண்ணங்கள் பொது மக்கள் மற்றும் போக்குவரத்துக்கு இடையூராக உள்ளதால் அதனை அருகில் மாற்றியமைப்பதற்கு ஆகும் செலவினத்தொகை ரூ 61,190/– ஐ மின் வாரியத்திற்கு வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்

இ3. 909/09

**<u>தீர்மானம் எண் : 96</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

**21.** இம்மாநகராட்சி வார்டு எண் 3, நந்தகோபாலபுரம் கிழக்கு கதவு எண் 48ஜெ/4 என்ற முகவரிக்கு திரு எம். பேச்சிமுத்து என்பவர் புதிய குடிநீர்க் குழாய் வேண்டி செலுத்திய முன் வைப்புத்தொகையினை வேறு கதவு எண்ணிற்கு மாற்றம் செய்து தர கேட்டுள்ளார். அலுவலக நடைமுறை விதிகளின்படி மேற்படி வைப்புத்தொகையினை வேறு கதவு எண்ணிற்கு மாற்றம் செய்ய இயலாது. எனவே அன்னாருக்கு மேற்படி குடிநீர்க்குழாய் முன் வைப்புத்தொகை ரூ 3000/–ஐ திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மாமன்றம் அனுமதிக்கலாம்

இ3. 24105/04

**<u>தீர்மானம் எண் : 97</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது

22. தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி பகுதி 1, கிராமம் இரயில்வே கடவு எண் 485இல் பயனுறு சாலை மற்றும் அணுகுசாலை அமைக்க சர்வே வார்டு 4, பிளாக் எண் 33, புல எண் உட்பிரிவு எண் 4149, 4151/1, 4151/2, 4151/3, 4151/4, 4152/1சி, 4152/1டி, 4152/2 ஆகியவற்றிலிருந்து நிலம் எடுப்பு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் , அதற்கான சம்மதக் கடிதத்தினை அனுப்பி வைக்குமாறு தூத்துக்குடி வட்டாட்சியரின் 9–3–2009ஆம் தேதிய நகஎண் ஆ1. 5245/2009ம் எண் கடிதத்தில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

நகரளவை ஆவணங்களில் மேற்குறிப்பிட்ட புல எண்களான 4149, 4151/1, 4151/2, 4151/3, 4151/4, 4152/1சி, 4152/1டி, 4152/2 ஆகியவற்றில் 4149 பிளேக் ஷெட் பெயரிலும் புல எண் 4151/3, 4152/1சி அரசினர் மாணவர் இல்லம் என்ற பெயரிலும், மீதியுள்ள மற்றைய புல எண்கள் ஆணையர், தூத்துக்குடி நகராட்சி என்ற பெயரிலும் உள்ளது.

நிலமாற்றம் கோரும் இடங்களான புல எண் 4149, 4151/1ல் அமைந்துள்ள புதிய பேரூந்து நிலையத்தின் கீழ்புறம் காலியிடமாகவும், புல எண் 4151/2 மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டியும், 4151/4ல் காலியிடமாகவும், 4152/1டி, 4152/2 ஆகியவற்றில் கட்டண கழிப்பறையும் உள்ளது. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ள இடத்தில் கீழ்புற காம்பவுண்ட் சுவரும், கட்டண கழிப்பறை மற்றும் கீழ்ப்புற காம்பவுண்ட் சுவரும் இடிக்கப்பட வேண்டிய நிலையில் உள்ளது.

எனவே புல எண் 4149, 4151/1, 4152/2, 4151/4, 4152/1டி, , 4152/2 ஆகிய இடங்களில் பாலத்தின் கீழ் பயன்பாட்டு சாலை (Service Road) அமைக்கப்பட்டு பாதசாரிகள் இரண்டு சக்கர வாகனங்கள் மற்றும் சிறிய வாகனங்கள் மற்றும் மினி பஸ் புதிய பேரூந்து நிலையத்திற்கு சென்று வரும் வகையில் அமைக்கப்பட வேண்டியுள்ளது. இந்தப்பகுதியில் பேருந்து நிலையத்திற்கு சென்று வர இதைத்தவிர பேறுபாதை வசதி இல்லை. எனவே மேற்கண்ட போக்குவரத்து நலன் கருதியும், பொதுமக்களின் நலன் கருதியும் மாநகராட்சியின் பராமரிப்பிலுள்ள கலைஞர் நீர்த்தேக்க நிலை சுற்றுச்சுவர் மற்றும் கட்டண கழிவறை ஆகியவற்றை அப்புறப்படுத்தி சர்வீஸ் ரோடு அமைக்க இடம் வழங்கலாம்.

மேலும் புதியதாக சுற்றுச்சுவர் அமைக்கவும், நீர்த்தேக்கத்தொட்டியில் உள்ள பைப் லைன் மற்றும் வால்வுகளை மாற்றியமைக்க ஆகும் செலவுத்தொகை நெடுஞ்சாலைத்துறையினரிடம் பெறப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அனுமதி வழங்கலாம்.

மேலும் அரசாணை (நிலை) எண் 25 நாள் 25–2–2000ன்படி நகராட்சி மற்றும் மாநகராட்சி மன்றங்களுக்குச் சொந்தமான பட்டா நிலமாக இருக்குமேயானால் அது எந்த அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனத்திற்கு தேவையானாலும், அதனை அப்போதைய சந்தை மதிப்பு ( Market value at the time) அடிப்படையியில தான் கொடுக்க வேண்டும் என்ற உத்திரவின்படி மேற்குறிப்பிடப்பட்டுள்ள புல எண்களில் தெரிவித்தபடி 0. 0540 .0 ச.மீ நிலத்தை நெடுஞ்சாலைத்துறைக்கு அதற்கான நிலக்கிரையத் தொகையினையும் மற்றும் மேற்காணும் செலவுத்தொகையினையும் பெற்றுக் கொண்டு நிலமாற்றம் செய்ய அரசின் அனுமதி வேண்டி கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்</u>**பு: மாமன்றம்_அனுமதிக்கலாம்.

எப்1. 5624/09

**<u>தீர்மானம் எண்: 98</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

23. பொன்விழா ஆண்டு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் (SJSRY) சுயவேலைவாய்ப்பு பயிற்சிக்காக 2008–09ஆம் ஆண்டிற்கு பயிற்சிக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு கீழ்க்கண்ட 5 பயிற்சிகள் நடத்த 5 பயிற்சிகள் அளிக்கும் நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டு உள்ளது.

பயிற்சி விவரம்

| | | |
|---|---|---|
| 1) | பனைஓலை பயிற்சி | 20 பயனாளிகள் |
| 2 | தையல் பயிற்சி | 21 பயனாளிகள் |
| 3 | சமையல் கலை | 21 பயனாளிகள் |
| 4 | பேஷன்டெக்னாலஜி | 21 பயனாளிகள் |
| 5 | செவிலியர் உதவியாளர் பயிற்சி | 21 பயனாளிகள் |
| | **மொத்தம்** | **104 பயனாளிகள்** |

மேற்கண்டுள்ள பயிற்சிகளுக்கு கீழ்க்குறிப்பிட்ட விபரப்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

**1. பனை ஓலை பயிற்**சி

1) Palm India Handicraft
Society Social Service Centre ஒரு நபருக்கு 3 மாத பயிற்சி ரூ. 1700/–

2) Social Reconstruction and
Development Society ஒரு நபருக்கு 3 மாத பயிற்சி ரூ. 1900/–

3) St, Jude Trust ஒரு நபருக்கு 3 மாத பயிற்சி ரூ. 2000/–

**2.தையல் பயிற்சி**

1) சக்கீனா தையல் பயிற்சி நிறுவனம் 1 நபருக்கு 3 மாத பயிற்சி ரூ.1950/–
2) தபிதா மகளிர் மன்றம் 1 நபருக்கு 3 மாத பயிற்சி ரூ. 2400/–
3) லேடீஸ்தையல்பள்ளி 1 நபருக்கு 3 மாதபயிற்சி ரூ.2850/–

**3.சமையல் கலை**

| | | |
|---|---|---|
| 1)V.V.J. ஆர்ட் ஆப் கேட்டரிங | 1 நபருக்கு 3 மாத பயிற்சி | ரூ.1700/– |
| 2)ராம் குரூப் ஆம் கேட்டரிங் | 1 நபருக்கு 3 மாத பயிற்சி | ரூ.2000/– |
| 3)SCT கேட்டரிங டெக்னாலஜி | 1நபருக்கு 3 மாத பயிற்சி | ரூ.2200/– |

**4.பேஷன் டெக்னாலஜி**

| | | |
|---|---|---|
| 1) குளோசல் அகடாமி & டிசையினிங் | 3 மாதத்திற்கு | ரூ.1700/– |
| 2) ராம இன்ஸ்டியூட் ஆம் யூனிங் | 3 மாதத்திற்கு | ரூ 2000/– |
| 3) சுபா டெய்லரிங் பள்ளி | 3மாதத்திற்கு | ரூ. 2100/– |

**5)செவிலியர் உதவியாளர் பயிற்சி**

| | | |
|---|---|---|
| 1) செந்தூரம் மகளிர் நல மன்றம் | நபர் 1க்கு 3 மாதம் | ரூ . 1700/– |
| 2) மலர் மகளிர் மன்றம் | நபர்1க்கு 3 மாதம் | ரூ. 1950/– |
| 3) நேரு மகளிர் மன்றம் | நபர்1க்கு 3மாதம் | ரூ. 1975/– |

1) பனை ஓலைப் பயிற்சிக்கு வரிசை எண்1ல் குறிப்பிட்டுள்ள Palm India Handicraft society social service center கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளி பொன்விழா ஆண்டு நகர்புற வேலைவாய்ப்புத்திட்ட வழிகாட்டு நெறிமுறைக்குட்பட்டு உள்ளதால் அவர்கள் கொடுத்துள்ள ரூ 1700/–ஐ ஏற்று பயிற்சி அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
2) தையல் கலை பயிற்சிக்கு வரிசை எண் 1ல் குறிப்பிட்டுள்ள சக்கீனா தையல் பயிற்சி நிலையம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளி ரூ 1950/–ஐ ஏற்று பயிற்சி அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
3) சமையல் கலை பயிற்சிக்கு வரிசை எண் 1இல் குறிப்பிட்டுள்ள V.V.J. ஆர்ட் ஆப் கேட்டரிங கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளி ரூ 1700/–ஐ ஏற்றுக்கொண்டு பயிற்சி அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
4) பேஷன் டெக்னாலஜி பயிற்சிக்கு வரிசை எண் 1இல் குறிப்பிட்டுள்ள குளோபல் அகடாமி கொடுத்துள்ள குறைந்த குறைந்த விலைப்புள்ளி ரூ 1700/–ஐ ஏற்றுக்கொண்டு பயிற்சி அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
5) செவிலியர் உதவியாளர் பயிற்சிக்கு வரிசை எண். 1ல் குறிப்பிட்டுள்ள செந்தூரம் மகளிர் நல மன்றம் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளி ரூ 1700/–ஐ ஏற்றுக்கொண்டு பயிற்சி அளிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

பொருளில் குறிப்பிட்டுள்ள 104 பயனாளிகளுக்கு பயிற்சி அளிக்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

எப்6/4949/09

**<u>தீர்மானம் எண்: 99</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

24) இம்மாநகராட்சியின் 2006–07ம் ஆண்டிற்குரிய கணக்குகள் முடித்து உடன்நிகழ் தணிக்கை பிரிவு உள்ளாட்சி நிதி தணிக்கை துறைக்கு அனுப்பப்பட்டதில் உதவி இயக்குநர் உடனிகழ் தணிக்கைத்துறை தனது நேர்முகக் கடிதம் எண். அ1/262/08 நாள் 30–5–2008ல் மேற் கணக்குகளை சரி செய்து மீள அனுப்புமாறு தெரிவிக்கப்பட்டது. புதிய இயல்பு நிலை கணக்கு முறைப்படி 24 அட்டவணைகள் தேய்மானம் கணக்கிடுதல் சொத்தாக்கம் செய்தல் போன்ற பல்வேறுவற்றை கணக்கிட்டு ஆண்டுக்கணக்குடன் இணக்கம் செய்யவேண்டியதிருப்பதாலும் குறிப்பிட்ட கால அவகாசத்திற்குள் கணக்குகளை சரிசெய்து அனுப்ப வேண்டியதிருப்பதாலும் இதற்கு முந்தைய ஆண்டுகளில் தனியார் கணக்கு பணியாளர் மூலம் முடிக்கப்பட்டுள்ளதுபோல் இவ்வாண்டும் 2006–07 கணக்குகளை தனியார் கணக்கு பணியாளர் (Consultant)

மூலம் முடிக்கவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ 25,000/– க்கு மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

பி1/19501/2006

**<u>தீர்மானம் எண்: 100</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதிக்கப்பட்டது.

25) இம்மாநகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் பாதாளச்சாக்கடை திட்ட பணிகள் முடிவடைந்த பின் மாநகர பகுதியில் உள்ள ஒவ்வொரு வரிவிதிப்பாளர் மற்றும் கட்டிட உரிமையாளர்கள் தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள், தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள் மற்றும் சிறிய, பெரிய சில்லறை விற்பனை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு மாநகராட்சி மூலம் வழங்கப்படும் பாதாளச் சாக்கடை இணைப்புகளுக்கு வடிகால் உபவிதிகள் பின்வருமாறு பட்டியலிட்டு மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது

**<u>வடிகால் திட்ட உப விதிகள்</u>**

1981ம் வருடத்திய கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம் 209, 210, 211, 212, 213, 214, 216, 217, 220, 221, 226, 432(7)e, 432(8), 441 ஆகிய பிரிவுகளின்படி வீட்டில் சாக்கடைகள் ஏற்படுத்தவும் மற்றும் கழிவுநீர் குழாய்கள், மல அறைகள் முதலிய சுகாதாரத்திற்கு உகந்த மற்ற அமைப்புகளை வீட்டின் உரிமையாளர்கள் இணைத்து வீடுகளுக்கும் வணிக உபயோகம், தொழிற்சாலைகள் மற்றும் இதர உபயோகங்களுக்கான புதை சாக்கடைத் திட்டத்துடன் இணைப்புகள் கொடுப்பதற்குமான விதிகள்.

ஒருவர் தனக்காகவோ அல்லது மற்றவருக்காகவோ சாக்கடைகள் சுகாதாரத்திற்குரிய அமைப்புகளை அல்லது மற்றைய அமைப்புகளை புதிய அல்லது ஏற்கனவே கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு அமைக்கவோ, கட்டவோ, அவைகளுக்கு மாறுதல்களோ செய்தால் அவர் கீழ்க்கண்ட விதிகளை பின்பற்ற வேண்டும்.

1. மல நீரையும் அதன் அடியில் தேங்கும் அசுத்தங்கள், சலவை செய்யும் நீர், சமையலறை நீர், குளியலறை நீர் இவைகளை வெளியேற்ற

ஒவ்வொரு திறந்த சாக்கடை மாத்திரமுள்ள் இடங்களைத் தவிர மற்ற இடங்களிலிருந்தும் ஒவ்வொரு கட்டிடத்திலும் அதனைச் சார்ந்த இடத்திலும் அதற்கு ஏற்ற வகையில் சாக்கடையை பாதுகாப்பான முறையில் அமைக்க வேண்டும். மேலும், மழைத் தண்ணீரை மற்ற கழிவு நீர் முதலியவை தனியாகச் செல்வதற்கான வசதிகளையும் ஏற்படுத்தி கொள்ள வேண்டும்.

2. வீடு, கடை மற்றும் கட்டிடத்தின் கூரைகளிலிருந்தும், கட்டிடத்தின் சுற்றுப்புறங்களிலிருந்தும் மற்றுமுள்ள திறந்த வெளிகளில் இருந்தும் விழும் மழைத் தண்ணீர் மலக்கழிவு நீருக்கு என அமைக்கப்பட்ட சாக்கடைகளிலோ (அ) பம்பிங் ஸ்டேஷனுக்கோ போய் சேராமல் தடுப்பதற்கு தகுந்த ஏற்பாடுகள் செய்து மழைத் தண்ணீர் செல்லும் வடிகாலில் மழைநீர் கால்வாய் நிலத்தடி நீர் ஆதாரத்தை அதிகரிக்கும் வகையில் (Rain Water Harvesting) மட்டும் மாநகராட்சி பொறியாளரால் அங்கீகரிக்கப்படும் இடத்தில் தடங்கலின்றி செல்லுமாறு அமைத்து பாதுகாக்கப்பட வேண்டும். மேலும் புதியதாக வடிகால் வீட்டு இணைப்பு கொடுப்பதற்கு முன் மழைநீர் சேகரிக்கும் அமைப்பு அவ்வீட்டில் கட்டாயமாக அமைத்திருக்க வேண்டும்.

3. ஒரு கட்டிடத்தின் கூரைகளிலிருந்து விழும் நீரை, வெளியேற்ற அதற்கான வடிகாலில் அல்லது மழைநீர் கால்வாயில் விழுந்து செல்லுமாறு வேண்டிய குழாய்கள், வாய்க்கால்கள் முதலிய வசதிகளை வீட்டின் உரிமையாளர் (அ) வாடகையிருப்போர் (அ) குடியிருப்போர் செய்து கொள்ள வேண்டும். பாதாள சாக்கடை இணைப்பில் மழைநீரினை சேர்க்கக் கூடாது.

4. அவ்வாறு கட்டப்படும் குழாய்களில் (அ) வாய்க்கால்களில் மலநீர் கழிக்கும் இடங்கள், குளிக்கும் அறை, கை கால் கழுவும் இடம் முதலியனவைகளிலிருந்து வெளித்தள்ளப்படும் திடப்பொருள் (அ) திரவப் பொருட்கள் விழுமாறு அமைக்கக்கூடாது.

5. மேற்கூறிய குழாய்கள் மண்ணிற்கு கீழ் தண்ணீர் ஊற்று தோன்றும் பகுதிகளில் அமைக்க வேண்டியிருந்தால், சிமெண்ட் கான்கிரீட் சுற்றிலும் போட்டு அமைக்க வேண்டும். மாநகராட்சி பணியாளரால் விரும்பப்படும் மற்ற இடங்களில் அக்குழாய்களை அமைக்க முற்படும் போது அவர் உத்தரவுப்படி சிமெண்ட் கான்கிரீட் போட்டு அதன்மேல் அக்குழாய்களை அமைத்தோ (அ) அவைகளை சுற்றிலும் சிமெண்ட் கான்கிரீட்டால் மூடியும் அமைக்க வேண்டும்.

5(a) கழிவறையில் உள்ள மலக்கழிவு மற்றும் அதனுடன் கலந்துள்ள கழிவுநீர் (Black Water) ஆகியவற்றை தனியாகவும், குளியல் அறை, சமையல் அறை, இதர கழிவுநீர் (Gray Water) ஆகியவற்றை தனியாகவும் பிரித்தெடுக்கும் வகையில் குழாய் இணைப்புகள் வீட்டு பகுதியில் அமைக்க வேண்டும். மலக்கழிவு மற்றும் அத்துடன் கலந்துள்ள கழிவுநீர் (Black Water) மட்டுமே வீட்டு இணைப்பு மூலம் பாதாளச்சாக்கடை குழாயில் போய் சேருமாறு உள்கட்டமைப்பு வசதிகள் அமைக்க வேண்டும்.

6. கற்களின் கலவை (அ) இரும்பாலான குழாய்களைக் கொண்டு சாக்கடை அமைத்தல் ஒரு கட்டிடத்திற்கு சாக்கடை அமைக்க முற்படுபவர் போதிய விட்ட அளவில் உள்ள குழாய்களை அமைக்க வேண்டும். அந்த சாக்கடைக் குழாய்களின் உள்விட்டம் 100 மி.மீட்டருக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். மாநகராட்சி பொறியாளரால் அங்கீகரிக்கப்படும் விட்ட அளவிற்கு மேலாகவோ அத்தண்ணீர் செல்வதற்கான அளவிற்கு மேலாகவோ இருத்தல் வேண்டும். கூடுதல் விட்ட பாதாளச் சாக்கடை அமைக்க முற்படும் பட்சத்தில் அதற்கான கட்டணத்தினையும் வைப்புத் தொகை செலுத்தி உரிய கட்டணத்தினை செலுத்தி பாதாளச் சாக்கடை இணைப்பினை பெற்றுக் கொள்ளலாம். மேலும் வீட்டு பாதாளச் சாக்கடை இணைப்பிலிருந்து Man hole வரை இணைப்பு பெறுபவரின் செலவில்/பொறுப்பில் பாதாளச் சாக்கடை அமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

6. அ) சாக்கடையின் அளவு:– அவ்வித சாக்கடைகளை மாநகராட்சி பொறியாளரால் அங்கீகரிக்கப்படும் வாட்டத்துடன் கீழ்க்கண்ட வாட்டங்களில் இருத்தல் வேண்டும். 100 மி.மீ. உட்விட்டமுள்ள சாக்கடைகளுக்கு 40க்கு 1ம், 150மி.மீ. உள்விட்டமுள்ள சாக்கடைகளுக்கு 80க்கு 1ம் வாட்டம் இருக்க வேண்டும். இந்த அளவுகளுக்கு குறைவாக இருந்தால் மாநகராட்சி பொறியாளர் அவர்களின் ஒப்புதல் பெறுதல் வேண்டும்.

ஆ) ஒவ்வொரு சாக்கடையும் ஒரே நேர்முகமாக அமைத்து அவற்றிற்கு சரியான வாட்டங்களுடன் கூடிய மட்டிலும் குறைந்த வளைவுகளுடனும் திருப்பங்களில் தகுந்த வளைவு குழாய் வாய்க்கால் முதலியவைகளையும் அமைக்க வேண்டும்.

இ) முடிந்த வரையில் வளைவுகளையும், குழாய் சந்திப்புகளையும் ஒன்று சேர்ந்து அவைகளை பரிசீலனை செய்வதற்கான பார்வை குழிகள் (Manholes) ஆள் இறங்கி பார்ப்பதற்கு ஏற்ப பார்வை குழிகள் கட்டப்பட வேண்டும்.

ஈ) அடுக்குமாடி வீடுகளுக்கு இணைப்பு வழங்கும் போது கீழ்க்கண்ட வழிமுறைகள் பின்பற்றப்படும்.

| | | |
|---|---|---|
| 1) 4 கழிப்பறைகள் வரை | – | குழாய் அளவு 100 மி.மீ |
| 2) 4க்கு மேல் 8 வரை | – | குழாய் அளவு 150 மி.மீ |
| 3) 8க்கு மேல் | – | குழாய் அளவு 2.50 மி.மீ |

இதற்கு மேல் குடியிருப்பவர்களின் எண்ணிக்கை கூடும்பொழுது பொறியாளர் வடிவமைத்துக் கொடுக்கும் அளவில் கூடுதல் இணைப்புகள் பதிக்க வேண்டும். இதற்காக கூடுதல் வைப்புத் தொகை மற்றும் இதர கட்டணங்களை மாநகராட்சிகளில் செலுத்தப்பட்டு இணைப்பு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

உ) அடுக்குமாடி குடியிருப்பு பயனாளிகளின், ஒவ்வொரு குடியிருப்புக்கும் தனித்தனியே வரிவிதிப்பு செய்து தனித்தனியாக வைப்புத் தொகை மற்றும் சேவை கட்டணம் வசூல் செய்யப்படும். மற்றும் தனித்தனி இணைப்புகளாகவோ அல்லது ஒட்டு மொத்த இணைப்பாக சேர்த்து (Manhole)லில் விடப்பட வேண்டும்.

7) கழிவுநீர் வரும் குழாய்கள் மற்றும் ஆள் இறங்கு குழிகள் முதலியன வட்டமாகவும் வளவளப்பாகவும் தண்ணீர் கசியாத துருப்பிடிக்காத இரும்பு குழாய்களாகவோ (C.I.Pipes) அல்லது சுடுமண் குழாய்களாகவோ (Stone / Ware Pipes) (அ) சிமெண்ட் கலவைகளாலான குழாய்களாகவோ இருத்தல் வேண்டும் மற்றும் தண்ணீர் புகாதபடி உள் மற்றும் வெளிப்புறங்கள் சிமெண்டினால் பூச வேண்டும் அல்லது குழாய்கள் சரியான இணைப்புகள் மூலம் சேர்க்க வேண்டும்.

8) மேற்குறிப்பிட்ட குழாய்களை கொண்டு அமைக்கப்படும் சாக்கடைகள் கீழ்க்காணும் விதத்தில் குழாய்களின் இணைப்பு, கனம் முதலியன இருத்தல் வேண்டும்.

| உள் விட்டம் | குழாய்களின் குறைந்தபட்ச கனம் | இணைப்பு கட்டின் (Socket) குறைந்தபட்ச ஆழம் | சிமெண்டின் குறைந்தபட்ச பரிமானம் | 0.60 மீ. நீளமுள்ள பைப்பின் குறைந்த பட்ச எடை |
|---|---|---|---|---|
| 100 மி.மீ | 12 மி.மீ | 50 மி.மீ | 10 மி.மீ | 8.70 கிலோ |
| 150 மி.மீ | 16 மி.மீ | 57 மி.மீ | 11 மி.மீ | 15.0 கிலோ |
| 250 மி.மீ | 20 மி.மீ | 70 மி.மீ | 16 மி.மீ | 27.5 கிலோ |

கழிவு நீர் இணைப்பு குழாய்கள் போன்ற பிரத்தியேக வடிவ குழாய்கள், அவை பாங்கான உருவுடனும் வளைவுகளினால் அவைகள் சரியான வட்ட வடிவமான இருத்தல் வேண்டும். மேற்படி சாக்கடை குழாய்கள் வார்ப்பு இரும்பு/சுடுமண் குழாய் அல்லது பி.வி.சியால் செய்யப்பட்டவையாய் இருக்க வேண்டும்.

9. எல்லாவித குழாய் இணைப்புகளும் தேவையான அங்கீகரிக்கப்பட்ட உதிரிபாகங்கள் பொருத்தப்பட்டு மாநகராட்சி பொறியாளரால் அங்கீகரிக்கப்படும் வகையில் சரியாக இருக்க வேண்டும்.

அவ்வாறாக கற்களின் கலவைக் கொண்டு செய்யப்படும் குழாய்கள் உள்ள சாக்கடையை அமைத்தால் இக்குழாய்கள் ஒன்றோடு ஒன்று சரியாக சேர்க்கப்பட்டு ஒரு பாகம் சிமெண்டும் (அங்கீகரிக்கப்பட்ட தினுசு) ஒருபாகம் மணலும் கலந்த கலவையாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

வார்ப்பிரும்புக் குழாய்கள் பொருந்திய சாக்கடைகள் அமைத்தால் அக்குழாய்களை இணைக்கும்போது அவ்விணைப்புகளில் 9.4 மில்லி மீட்டருக்கு குறையாமல் ஆழமும், காய்ச்சி உருக்கின ஈயத்தால் சரியாக இணைக்கப்பட வேண்டும். 100 மி.மீ. குழாயாக இருப்பின் இடை வெளியானது 10 மி.மீட்டர் அகலத்திற்கும் குறையாமல் இருக்க வேண்டும்.

10. பக்கவாட்டில் உள்ள பொருள்களுக்கு சேதம் நேராவண்ணம் தோண்டின இடத்தின் பக்கங்கள் சரியான முறையில் மரக்கட்டைகளால் தடுப்பு ஏற்படுத்த வேண்டும்.

அ) ஒவ்வொரு குழாயும் சரியான முறையில் நிலத்தில் உறுத்தியாக அமைக்கப்பட்டு தண்ணீர் ஊற்றி நன்றாக கெட்டிபடுத்த வேண்டும். சாக்கடைக் குழாய்களின் போகும் பாதை கெட்டியான தரையில்லா இடங்களிலோ தண்ணீர் ஊறும் பாகங்களிலோ போட நேர்ந்தால் அவ்விடங்களில் மாநகராட்சி பொறியாளரால் நிர்ணயிக்கப்படும் அளவு போதிய கன அளவு உள்ள கான்கிரீட்டின் மேல் போட்டு குழாய்களைச் சுற்றிலும் கான்கிரீட்டினால் மூடப்பட வேண்டும்.

ஆ) அவ்வித ஒவ்வொரு சாக்கடையும் மேற்கூறிய வகையில் தண்ணீர் உட்புகாமலிருக்கும் வண்ணம் அமைத்து அதை மாநகராட்சி பொறியாளரால் குறிப்பிடப்படும் அழுத்தம் தாங்கும் திறன் உள்ளதா என்பதை பரிசீலனை செய்து மாநகராட்சி பொறியாளரின் ஒப்புதல் பெற வேண்டும்.

11. அமைக்கப்படும் சாக்கடைகளுக்கு வசதிக்காக வைக்கப்படும் துறைகளைத் தவிர ஒவ்வொரு சாக்கடையின் உட்புறவாயிலும் 50.மி.மீட்டர்கள் அல்லது மேல் உள்ள மட்டத்திற்கு குறையாத தண்ணீர் தேக்கி வைத்துக் கொள்ளும்படியான பொறியுடன் பொருத்தியதாக இருக்க வேண்டும். அவ்வாறு வைக்கப்படும் பொறிகள் (Trap) பெல்டிராப் (Bell Trap) ஆகவோ டிப் டிராப் (Dip Trap) ஆகவோ இருத்தல் வேண்டும் அல்லது Inspertion Chamber 50 மீ.மிக்கு கீழ் மண் துகள் தங்கி தண்ணீர் மட்டும் செல்லும் அமைப்புடன் அமைக்கப்பட வேண்டும்.

12. மாநகராட்சி பொறியாளரால் அங்கீகரித்த அளவுகள் மற்றும் உறுதிப்பாடுடன் கூடிய எல்லா சாக்கடைகளின் பொறிகள் (அ) மூடிகள் போன்றவைகளையேதான் அமைக்க வேண்டும். 100 மி.மீட்டர்கள் கனம் கான்கிரீட் தனத்தின் மேல் தான் ஒவ்வொரு பொறிகளையும் அமைத்து தண்ணீர் மட்ட 31 செ.மீட்டருக்கு குறைவாக உள்ள சல்லடை மூடிகள் (Grating) 2.5 செ.மீட்டரும் அங்குள்ள நடைபாதைக்கு கீழாக இருக்குமாறு அமைக்க வேண்டும். நடைபாதையை அங்குள்ள சாக்கடையின் சல்லடை (Grating) பாதி அளவிற்கு போதுமான சாய்ந்த பரப்பாக இருக்குமாறு செய்ய வேண்டும்.

13. இவ்விதிகளின்படி மேற்கூறியவாறு அமைக்கும் அமைப்புகள் யாவும் அருகிலுள்ள வீதி (அ) தளபரப்பு வரை தண்ணீர் உட்புகாவண்ணம் மேலே தக்க இரும்பு மூடிகளால் மூடப்பட்டு இருக்கும்படி செய்ய வேண்டும்.

14. மாநகராட்சி சாக்கடையுடன் சேருகின்ற கட்டிடத்தின் சாக்கடைகள் யாவையும் நேர்கோண வடிவில் செங்குத்தாகவோ, சமதளமாகவோ சேர்த்தல் கூடாது. அவ்வாறான சாக்கடைகளும் கிளை சாக்கடைகளும் மாநகராட்சி சாக்கடையுடன் இணைக்க விரும்பினால், மாநகராட்சி சாக்கடை செல்லுகின்ற வழிகளிலேயே சாய்வாக இந்த சாக்கடைகளையும் கொண்டு சென்று இணைக்க வேண்டும்.

15. வேறு எவ்வித வழியிலும் சாக்கடை அமைக்க வழியில்லாமல் போனாலன்றி சாக்கடைகளை அக்கட்டிடத்திற்கு அடியில் அமைக்கக் கூடாது. அவ்வாறு ஒரு கட்டிடத்தின் கீழாக சாக்கடைகளை அமைக்க முயன்றால் கீழே கொடுக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.

அ) சாக்கடை முடிவதும் அக்கட்டிடத்தின் கீழான ஒரே நேர்க்கோட்டில் இருக்குமாறு அமைக்க வேண்டும்.

ஆ) அந்த சாக்கடை வார்ப்பு இரும்பு குழாய்களைக் கொண்டு ஈயத்தால் ஒன்று சேர்க்கப்பட்டோ (அ) கற்கலவை குழாய்களைக் கொண்டு 15 செ.மீட்டர்கள் கன அளவுக்கு கான்கிரீட்டால் ஒன்று சேர்க்கப்பட வேண்டும்.

இ) கட்டிடத்தின் அடியில் செல்லும் சாக்கடையின் வாயில் ஒவ்வொன்றிலும் திறந்து பார்ப்பதற்குரிய அமைப்பு இருக்க வேண்டும்.

16. சாக்கடைகள் ஒரு சுவரின் கீழாகவோ (அ) அதனுள் நுழைந்தோ செல்ல வேண்டி இருப்பின் அதன் பாதுகாப்பிற்காக சுவரில் அதற்கு இணையாக ஒரு வளைவு செய்து மாநகராட்சி பொறியாளரால் குறிப்பிடும் வகையில் ஆர்.சி.சி கான்கிரீட் (அ) சாக்கடையை தாங்கும் அளவு இரும்பினால் பாதுகாக்குமாறு வளைவான பாகத்தை அமைக்க வேண்டும். அவ்வாறு அமைக்கும் வளைவால் சாக்கடைக்கு எக்காலத்திலும் யாதொரு இடையூறும் நேராவண்ணம் இருக்க வேண்டும்.

ஒரு சாக்கடையைச் சுற்றியோ அதன் மீதோ பிற்காலத்தில் சுவர் எழுப்பப்பட வேண்டியிருந்தால் அந்த சாக்கடைக்கு மேற்சொன்ன முறையில் பாதுகாப்பு அமைக்க வேண்டும்.

17. **<u>சாக்கடைகளுக்கு காற்று வசதி</u>**: ஒரு பெரும் சாக்கடையிலோ (அ) கிளை சாக்கடையின் தலைப்பிலோ மாநகராட்சி பொறியாளரால் குறிப்பிடும் இடங்களில் பொறியில்லாத திறப்புகளை அமைக்க வேண்டும். இம்மாதியான திறப்புகளை பொறிகளோ (அ) வேறு யாதொரு விதமான அமைப்புகளோ இல்லாமல் காற்று உட்புகுவதற்கு வசதியாக இருத்தல் வேண்டும். ஒவ்வொரு திறப்புகளும் சாக்கடையின் தலைப்பிலிருந்து செங்குத்தாக ஒரு குழாய் மூலமாக இணைக்கப்பட வேண்டும். அவ்வாறு இணைக்கப்படும் இணைப்புகளும் கீழ்க்காணும் வண்ணம் அமைத்தல் வேண்டும்.

அ) அவ்விணைப்பு யாதொரு கட்டிடத்தின் ஜன்னலிலிருந்தோ அக்கட்டிடத்தின் வாயில்களிலிருந்தோ மேல் பக்கமாகவோ கீழ்பக்கமாகவோ 6 மீட்டர் தொலைவிற்குள் முடிந்து விடக்கூடாது.

ஆ) கட்டிடத்தின் கூரைகளைத் தாங்கி நிற்கும் ஒரு சுவர் மேல் அவ்விணைப்பு பொருத்தப்படுவதாய் இருந்தால் அக்கூரைகளுக்கு மேலே 60 செ.மீட்டர்கள் அதிக உயரத்தில் குறைவில்லாது இருக்க வேண்டும்.

இ) அடுத்து குடியிருப்போருக்கு யாதொரு இடைஞ்சலும் கொடுத்திடா வண்ணம் இவ்விணைப்பு அமைக்கப்பட வேண்டும்.

18. மேற்கூறிய விதிகளின்படி அமைப்பதுடன் மாநகராட்சி பொறியாளர் கூறும் இடங்களில் இணைப்புகளைக் கத்தரிக்கும் பொறிகள் அமைத்து அவைகளுக்கு அருகாமையில் கட்டிடங்கள் இருக்கும் பாகத்தில் பொறிகளற்ற ஒரு துளை இருக்குமாறும் அமைக்க வேண்டும். மேற்சொன்ன திறப்பு பக்கத்தில் உள்ள தளத்திற்கு மேலாகவும் அருகில் இருக்க வேண்டியதுடன் சாக்கடைக் குழாய் மூலமாகவோ தொட்டிகள் மூலமாகவோ சேருமாறு அமைத்தல் வேண்டும்.

19. மேற்குறிப்பிட்ட வகையில் அமைக்கப்படும் ஒவ்வொரு திறப்புக்கும் கீழேயுள்ள குழாய்களுக்கோ சாக்கடைக்கோ கெடுதி நேராவண்ணம் சரியாக பொருத்துமளவில் கம்பிகளால் இணைக்கப்பட்ட கிராதிகளையோ (Grating) (அ) வேறு பொருள்களை கொண்டு செய்யப்பட்ட (அ) குழாய் குறுக்களவுக்குத் தக்கவாறு காற்று தாராளமாக நுழையுமாறும் உள்ளிருக்கும் குழாயின் பரப்பளவிற்கு குறைவாக இல்லாமல் துளைகளுடன் இருக்க வேண்டும்.

20. வேறு எவ்வித வழியும் இல்லாமல் போனாலன்றி மேற்கூறிய 17வது துணைவிதி முறையில் அமைக்கப்படும் பைப்புகளில் குழாய்களை வளைவாகவோ கோணவடிவமாகவோ அமைக்க கூடாது.

முன்னர் கூறப்பட்ட வகையில் அமைக்கப்படும் குழாய்கள் உள்விட்டம் 100 மி.மீட்டருக்கு குறைவாக இல்லாமல் இந்தியன் ஸ்டான்டர்டு ஸ்பெசிபிகேசனில் சொல்லியிருக்கும் வண்ணம் வார்ப்பு இரும்பால் செய்யப்பட்ட கூடும், முனையும் உள்ள குழாய்கள் காற்றுப் புகும் குழாய்களைக் குறித்து இருக்குமாறு அமைக்க வேண்டும்.

21. இடம், குறுக்கு வெட்டுப்பரப்பு, உயரம் கட்டப்பட்ட மாதிரி முதலிய எல்லா வகையிலும் 18ம் விதி வகையில் எல்லாவித பொருத்தங்களும் உடையதாக உள்ள தண்ணீர் தொட்டியின் மண் குழாய்கள் இருந்தால் அவைகள் மேலே கண்ட 20ம் விதிகளின்படி திறப்புகளையும் உடையனவாக இருப்பதாக கருதப்படும்.

**22. கழிவுப் பொருளை வெளித்தள்ளும் குழாய்கள்**

குளிக்கும் அறை, மல அறை முதலிய இடங்களிலிருந்து வெளித்தள்ளப்படும் கழிவுப் பொருள்களை கொண்டு செல்வதற்காக ஏற்படுத்தப்படும் குழாய்கள் யாவும் 40 முதல் 50 மி.மீட்டர் உள்விட்டம் உடையதாகவும் ஈயத்தாலோ (அ) வார்ப்பு இரும்பாலோ செய்யப்பட்டதாகவும் அக்கழிவுப் பொருள்கள் தள்ளப்படும் இடங்களாகிய குளிக்கும் அறை முதலிய இடங்களுக்கு சற்று கீழாகவும் தக்க சைபன் பொறி அமைக்கப்படும் பொறிகளைத் தேவைக்குரிய காலங்களில் திறந்து சுத்தம் செய்வதற்கு அனுகூலமாய் இருக்கும் வகையிலும் வெளிக்காற்று உட்புகாத வண்ணம் அமைக்கப்பட வேண்டும்.

23. அவ்வாறாக கட்டப்படும் ஒவ்வொரு குழாயும் கழிவுநீரைக் கொண்டு செல்வதற்காக கட்டிடத்தின் வெளிச்சுவற்றிற்குள்ளாக எடுத்துச் செல்லப்பட்டு திறந்த வெளியிலுள்ள ஒரு சாக்கடைக்கோ (அ) சாக்கடைக்கு செல்லும் கால்வாய்க்கோ சென்று முடியுமாறு முடிந்த வரையில் குறைந்த நீளமுடையதாக சேருமாறு செய்ய வேண்டும்.

24. மேற்கூறும் வகையில் அமைக்கப்படும் குழாய்கள் ஒவ்வொன்றும் மாநகராட்சிப் பொறியாளர் விரும்பும் வகையில் சுவருக்குள்ளாக ஒன்றாகப் பொருத்தப்பட வேண்டும். அவ்வாறு மாநகராட்சி பொறியர் குறிப்பிடும் வகையில் பொருத்தமாக அமைக்கப்படும் குழாய்கள் வார்ப்பு இரும்பால் செய்யப்பட்டவையானால் அவைகளுக்கு ஆங்காங்கே நீடிக்கும் பட்டைகள் (Holder Bats) (அ) பிடிகளைக் கொண்டு தக்கபடி பொறுத்தப்பட வேண்டும்.

25. தண்ணீர் தொட்டி, கழிவுநீர் அறை இவற்றின் அமைப்புகளும், கருவிகளும் திட திரவமாக வெளித்தள்ளப்படும் கழிவுப் பொருள்களைச் சேகரிக்கும் இடங்களாகிய பாத்திரம், சிறுநீர் இருக்குமிடம் பீங்கான் பாத்திரம் முதலிய யாவும் தனித்தனியாக தண்ணீர் உள்ள ஜாடி ஒவ்வொன்றில் பொருத்தியிருக்க வேண்டும். அவ்வாறுள்ள சிறுநீர் கழிக்கும் அறைகளின் பாகங்களில் ஒன்று வெளிப்புற சுவராக இருக்குமாறு அமைக்க வேண்டும். சாதாரணமாக வீட்டிலுள்ளோர் புழங்கும் அறையிலிருந்தோ, ஏதாவது உணவு பொருள்கள் (அ) மற்ற பொருள்கள் உண்டாக்கும் இடத்திற்கு அருகாமையிலோ தொழிற்சாலைக்கென அமைக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்தோ நேரடியாகப் போகும்படியாக சிறுநீர் கழிக்கும் அறையோ (அ) மல அறைகளோ அமைக்கக் கூடாது. சாதாரணமாக திறந்த வெளிகளினின்றும் எளிதில் அவற்றுள் நுழையுமாறு அவை அமைக்கப்பட வேண்டும்.

26. அவ்விதமான சிறுநீர் கழிக்கும் அறையோ (அ) மல அறையோ கட்டுவதாய் இருந்தால் அதன் குறைந்த உள்ளளவு 125 செ.மீ x 85 செ.மீ இருக்க வேண்டும். மற்றும் அது வீட்டிலுள்ள குடியிருக்கும் அறைக்கோ, அவ்வீட்டின் அறைக்கோ அல்லது தொழிற்சாலைக்கென அமைக்கப்பட்ட இடம் போன்றோ உள்ளவைகளுக்கு அண்மையில் அமைக்கப்படுமாயின் அவை மறைப்பதற்காக அடித்தளத்திலிருந்து (கட்டிடத்தின்) மேல்கூரை வரை முழு உயரத்திற்கு செங்கல், கருங்கல் இவைகளாலான சுவரால் மறைக்கப்பட வேண்டும். இவ்விதம் சிறுநீர் கழிக்கும் அறையோ, மல அறையோ அமைக்கப்படுவதாயிருந்தால் அது வழவழப்பான உறுதியான பொருளினால் செய்யப்பட்டு தண்ணீர் உட்புகாத தரைகளில் செய்யப்பட்டு, உயரத்திலிருந்தால் 30 செ.மீட்டருக்கு 13 மி.மீ வாட்டமும் வெளியில் 0.05 மி.மீ விழுமிடத்தில் சேருமாறு அமைக்க வேண்டும். மேற்கூறிய சிறுநீர் கழிக்கும் அறைகள் மல அறைகளின் தரையானது வெளிப்புறத்திலுள்ள தரையிலிருந்து 15 செ.மீட்டர் அளவு உயரத்தில் உள்ளதாக இருக்க வேண்டும். அவ்வித மல அறைகளுக்கும் சிறுநீர் கழிக்கும் அறைகளுக்கும் தகுந்த அடைப்பான்களும் கதவுகளும் வைக்க வேண்டும்.

27. மேற்சொன்ன சிறுநீர் கழிக்கும் அறை (அ) மல அறை போன்றவை இருக்கும் இடத்தைச் சுற்றியுள்ள சுவர்களில் ஒன்றில் குறைந்தது 1,900 சதுர செ.மீட்டர்கள் பரப்புள்ள ஒரு ஜன்னல் (அ) திறப்பு இருக்க வேண்டும் காற்று உட்புகுவதற்கென வெளிப்புறச் சுவரில் தரைக்கு அருகாமையில் 120 ச.செ.மீ. பரப்புக்குக் குறையாக துளைகளும் உயர்ந்த பாகத்தில் 460 சதுர செ.மீ அளவுள்ள துளையும் இருக்க வேண்டும்.

28. 12 லிட்டர் கொள்ளளவுக்கு குறையாமலும் மாநகராட்சி பொறியாளர் அனுமதித்தால் 15 லிட்டர் கொள்ளளவுக்கு மேற்படாத தண்ணீர் வீணாகாத மாதிரி தொட்டி ஒன்றை மேற்கொள்ள சிறுநீர் கழிக்கும் அறையை (அ) மல அறையை கழுவும் பொருட்டு மாத்திரம் உபயோகப்படுத்தும்படியும் மற்றும் குடிதண்ணீர் கொண்டு செல்லும் வேறு தொட்டியுடன் (அ) தண்ணீர் வழங்கும் குழாயுடன் இணைக்கப்படாமலும் மற்றும் இத்தொட்டியின் அடித்தளத்திலிருந்து தண்ணீர் விழும் இடத்திலிருந்து குறைந்தது 1.5 மீட்டர் உயரத்திற்குக் குறையாமல் அமைக்கப்பட்டு இருக்க வேண்டும்.

ஒவ்வொரு தொட்டியும் தண்ணீர் வழங்கும் குழாயிற்கு தக்க உருண்டை வடிவில் ஒரு அடைப்பானும் அதிகமாக தண்ணீர் நிரம்பினால் வெளியே திறந்த வெளியில் நன்றாக தெரியும்படியான இடத்தில் வந்து விழும்படியான வடிகுழாயும் உடையனவாயிருக்க வேண்டும். ஆனால் இவ்வாறு வழியும் தண்ணீரானது நேரடியாக ஒரு சாக்கடையில் விழக்கூடாது.

29. மாநகராட்சி ஆணையர் அவர்களால் எழுத்து மூலமாக ஆணை பெற்றாலொழிய தானாக வேலை செய்யும் தண்ணீரை வெளித்தள்ளும் அமைப்புகளை பொருத்தக்கூடாது. இவ்வாறு ஆணை பெற்றாலும் மாநகராட்சி பொறியாளர் அவ்வனுமதிச் சீட்டையும் உபயோகப்படுத்தப்படும் அமைப்புகளின் விவரங்களையும் இவ்வமைப்புகளைப் படங்கள் மூலமாகவும், அவ்வமைப்புகள் எப்பொருள்களால் செய்யப்பட்டன என்பதையும் விளக்கமாக எடுத்து எழுதி அவரது ஆணையைப் பெற வேண்டும். மாநகராட்சி பொறியாளர் கூறும் வகையில் அவ்வமைப்பு திருத்தி அமைக்கவும் வேண்டும்.

30. அவ்வித கழிவு நீர்த்தொட்டியுடனும் மல அறை சிறுநீர் கழிக்கும் தொட்டி முதலியவைகளிலிருக்கும் தட்டு, ஜாடி முதலியவைகளுடன் இணைக்கும் குழாய் எந்த இடத்திலும் குறைந்தது 32 மி.மீ அளவு உட்விட்டம் உடையதாகவும், குழாய் எவ்வளவு செங்குத்தாய் இருக்க முடியுமோ அவ்வளவு செங்குத்தாகவும் அமைய வேண்டும்.

31. சிறுநீர் கழிக்கும் தொட்டி (அ) மல அறை போன்றவைகட்கு மாநகராட்சி பொறியாளரால் அங்கீகரிக்கப்பட்டது போன்ற கருவிகளால் அவைகளுக்கு ஏற்றமுறையில் அமைக்க வேண்டும். அப்படிப்பட்ட கருவிகள் கீழ்க்குறிக்கப்பட்டுள்ள அமைப்புகளை உடையதாயிருக்க வேண்டும்.

1. ஏற்ற கொள்ளளவு உருவம் – உருவத்தின் மாதிரி முதலியவற்றை உடைய ஒரு தக்க பாத்திமாகவும்,

அ) போதிய அளவு தண்ணீரை தன்னுள் கொள்ளுமாறும்,

ஆ) திடப்பொருளாக அவ்வப்போது வெளித்தள்ளப்படும் கழிவுப் பொருள்களை எளிதில் தானாகவே அப்பாத்திரத்தில் உள்ள தண்ணீரில் விழுமாறும், சிறுநீர் இருக்கும் தளம் கூடிய அளவு சிறியதாக இருக்குமாறு உள்ள அமைப்புடனும்,

இ) அக்கழிவுப் பொருட்களை எளிதில் சிறிதளவு தண்ணீரால் நன்றாக சுத்தம் செய்து வெளித்தள்ளுமாறும் இருக்க வேண்டும்.

2. இவ்வமைப்புகள் அன்றி கழிவுப் பொருட்கள் அங்கேயே தங்கியிருக்குமாறு அதை வெளியே எடுத்துக் கழுவி தூய்மை செய்யுமாறும் உள்ள பாத்திரங்களால் அமைக்கக் கூடாது. பிரத்தியேகமாக அனுமதிக்கப்பட்டால் மாத்திரம் அப்பாத்திரத்துடன் ஒன்றாகவும் இல்லாவிடில் அவைகள் சைபன் பொறியுடன் நேர்முகமாக இணைக்கப்பட்டு அவைகளுடன் இணைக்கப்பட்டுள்ள மட்குழாய்கள், சாக்கடைகளுக்கும் அவைகளுக்கு இடையில் தக்கபடி 51மி.மீட்டருக்குக் குறையாமல் தண்ணீர் எப்பொழுதும் நின்றிருக்குமாறும் இருக்க வேண்டும். வேறு வழியில்லாத பொழுது தவிர மற்ற பொழுது அவ்விடத்தில் உள்ள சைபன் பொறியின் வெளிவாய் எளிதில் பார்க்கும் வண்ணம் இருத்தல் வேண்டும்.

3. அவைகளுக்கு தண்ணீரை எளிதில் உட்செலுத்தி, அங்குள்ள (அ) பொறி முதலியவற்றில் அப்பொழுது விழுந்திட, திரவ பொருட்கள் உடனே வெளித்தள்ள தகுந்த ஒரு அமைப்பு இருக்க வேண்டும்.

4. யாதொரு பாத்திரத்தையோ, தொட்டி போன்ற மற்ற கருவிகளைச் சுற்றி மரத்தால் (அ) வேறு பொருள்களால் செய்யப்பட்ட மூடிகளால் பொருத்தக் கூடாது.

## 32. கழிவு நீர் குழாய்கள்

இயன்ற வரையில் தண்ணீர் திட திரவக் கழிவுப் பொருள்கள் முதலியவற்றை சாக்கடைக்கு கொண்டு செல்லுமாறு அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர்த் தலைக்குழாய்கள் யாவையும் கட்டிடத்திற்கு வெளிப்புறம் இருக்குமாறு அமைக்க வேண்டும். இவை வார்ப்பு இரும்பாலோ (அ) வார்ப்பு ஈயத்தாலோ செய்யப்பட்டதாயிருக்க வேண்டும். கட்டிடத்தின் உட்புறமாகவோ அக்குழாய்கள் அமைக்கப்பட வேண்டுமென அவசியம் ஏற்படுமாயின் அவ்வாறான குழாய்கள் உருக்கிய ஈயத்தால் ஆக்கப்பட்டு எளிதில் கண்டுபிடிக்கக் கூடியதாகவும் வெளியில் தெரியும்படியான இணைப்புகளுடனும் அமைக்கப்பட வேண்டும். ஈயக் குழாய்கள் உபயோகிக்கப்பட்டால் அவை உறுதியான ஈயத்தால் செய்யப்பட்டு 100மி.மீ. அளவில் உள்விட்டம் உடையதாகவும் ஒரே அளவு கனம் அக்குழாய் முழுவதும் இருக்குமாறும் 100மி.மீ குழாயாய் இருந்தால் நீள அளவில் 1 மீட்டருக்கு குறைந்தது 11கி.கி. கனமும் 125 மி.மீ. குழாயாக இருந்தால் நீள அளவில் 1 மீட்டருக்கு குறைந்தது 15 கி.கி. கனமும் இருக்குமாறும் இருந்தல் வேண்டும். வார்ப்பு இரும்பால் குழாய்கள் செய்யப்படுமாயின் அவை இந்தியன் ஸ்டான்டர்டு ஸ்பெசிவிகேசன்படி உள்ள முனை கூடு முதலியவற்றை உடைய குழாய்களைப் போன்ற ஒத்திருக்க வேண்டும்.

33. கழிவுநீர் குழாயின் அடித்தளம் கான்கீரிட் களத்தில் போடப்பட்டு சுவருடன் உறுதியாகப் பொருத்தப்பட வேண்டும். வார்ப்பு இரும்புக் குழாய்களாக இருப்பின் பிடிக்கும் மட்டைகள் அமைக்கப்பட்டு பொருத்தப்பட வேண்டும். மாநகராட்சி பொறியர் திருப்தியுறும் வகையில் இக்குழாய் சுவர்களில் தகுந்த அமைப்புகளுடன் பொருத்தப்படுமாயின் போதுமானதாகும்.

34. அக்கழிவு நீர் தலைக்குழாய்கள் கட்டிடத்தின் உள்ளேயாயினும் வெளியேயாயினும் இருப்பின் மழைத் தண்ணீருக்காகவோ (அ) வேறு இடம் முதலியவற்றிலிருந்து வெளித் தள்ளப்படும் கழிவுப் பொருள்களுக்காகவோ கட்டப்பட்டுள்ள குழாய்களுடன் இணையாதவாறு அமைக்கப்பட வேண்டும். அக்கழிவு நீர் தலைக்குழாய்களிலோ அக்கழிவு நீர் குழாய்களுக்கும் அவைகளுடன் இணைக்கப்பட்ட மற்ற சாக்கடை குழாய் முதலியவைகளுக்கு இடையே யாதொரு பொறிகளில்லாமலும் இருக்க வேண்டும்.

35. அக்கழிவு நீர் தலைக்குழாய் உருண்டை வடிவில் 50 மி.மீ. அளவிற்கு குறையாத விட்டமுடையதாகவும் உயரமாக (கட்டிடத்தில் உள் (அ) வெளிப்புறம்) குழாயின் தொடர்பு எடுத்து செல்லப்பட்டு, இயலாமற் போகுமிடங்களைத் தவிர மற்ற இடங்களில் 100 மி.மீ. அளவு விட்டத்திற்கு அக்குழாய் குறையாமலும் அவ்விடங்களில் வளைவாகவோ அல்லது கோணமாகவோ அமையாமலும் தக்க உயரத்திலும் தக்க இடத்திலும் அமைக்கப்பட வேண்டும். அவ்வாறு உயரமாகக் கொண்டு செல்லப்படும் குழாய்களுக்கு இறுதியில் ஒரு திறப்பு அசுத்தமான காற்றை வெளித்தள்ளுவதற்கென்றே தக்கமுறையில் அமைத்துவிட வேண்டும். அவ்வமைப்பு 17ஆம் விதியில் குறிப்பிட்டுள்ளபடி (அ), (ஆ) (இ) முதலிய பகுதிகளுக்கு ஒத்திருக்க வேண்டும்.

36. கழிவு நீர்க்குழாய்கள், மற்ற நீரை வெளிப்படுத்தும் குழாய்கள் காற்று வசதிக்காக (அ) மற்றும் வேறு குழாய்கள் யாவும் மண்ணின் மேல் தளத்திற்கு உயரமாக அமைக்கப்படுமாயின் அவையாவும் காற்று வெளிப்போகா வண்ணம் இருக்கிறதா என்பதை மாநகராட்சி பொறியர்

(அ) அவரால் அதிகாரம் பெற்ற ஒரு அதிகாரியின் முன்னிலையில் அவர் சொல்லும் விதம் அக்குழாய்களுள் புகையைச் செலுத்தி அவை வெளிவராவண்ணம் குழாய்கள் இருக்கின்றனவா எறும் சோதனை மூலம் காண்பிக்க வேண்டும்.

**<u>37. சிறுநீர்ப்பொறி அறைகளுக்குக் காற்று வசதி</u>**

சிறுநீர் அறை அமைக்கும்பொழுது அது எந்தக் கழிவுநீர் தலைக்குழாயுடன் இணைக்கப்படுகிறதோ அத்துடன் மற்றைய சிறுநீர் அறைக் குழாய்களும் இணைக்கப்பட்டிருந்தால் அவ்வித சிறுநீர் அறைப்பொறி ஒவ்வொன்றிலும் வெளிக்காற்று உட்புகுவதற்கு வசதியாக பொறி ஒன்று அமைத்துவிட வேண்டும். அவ்வமைப்புக்கு வெளியே அங்கு கழிவுநீர் தலைக்குழாய் மேல்நோக்கி சென்றுள்ள உயரத்திற்கு சரியாகவோ (அ) அக்குழாயிற்குள்ளாகவே இணைக்கப்படுகின்ற சிறுநீர் அறை எது அதிக உயரத்தில் உள்ளதோ அவ்வுயரத்திற்கு மேலாக இருக்கும்படி அமைக்க வேண்டு. அந்த விதத்தில் காற்று வசதிக்காக இருக்க வேண்டும். காற்று வசதிக் குழாயுடன் கழிவுநீர் குழாயும் (அ) பொறியும் சேர்க்கும் இணைப்பு குழாயில் தண்ணீர் செல்கின்ற வழிநோக்கி இருக்க வேண்டும்.

38. காற்று வசதிக்கென அமைக்கப்படும் அவ்வித குழாய் உருக்கு ஈயத்தாலோ (அ) உறுதியான வார்ப்பு இரும்பாலோ 27ஆம் விதியில் குறிப்பிட்டு உள்ளவாறு செய்யப்பட்டு 29ம் விதியில் குறிப்பிட்டுள்ளபடி பொருத்தப்பட்டு இருக்க வேண்டும்.

ஒரு கட்டிடத்திற்கு உட்புறமாகவே அவ்வாறான குழாயைப் பொருத்த வேண்டுமாயின் அது உருக்கு ஈயத்தால் செய்யப்பட்டிருந்தாலும் போதுமானது.

39. ஒருவர் தனக்காகவோ (அ) பிறருக்காகவோ சாக்கடைகளைக் கட்ட முற்பட்டால் அந்த சாக்கடைகளுடன் மண்ணால் கட்டப்பட்ட சிறுநீர் அறை (அ) சாம்பல் போடும் குழியோ (அ) கழிவுப் பொருள்களுக்கான கொள்கலம் முதலியவைகளோ நேர்முகமாக (அ) மறைமுகமாக இணைக்கப்படுதல் கூடாது.

40. திறந்த சாக்கடைகள்: ஒரு கட்டிடத்திற்குள் மழைத்தண்ணீர் (அ) கழிவுநீர் முதலியவைகளை வெளித்தள்ளுவதற்கென்று திறந்த ஒரு சாக்கடையை ஏற்கனவே அமைக்கப்படாமலிருப்பின் அக்கட்டிடத்திற்குட்புறம் எந்த இடத்திலும், மலநீர் வெளிச்செல்வதற்கு என புதியதாக திறந்த சாக்கடைகள் கட்ட அனுமதிக்கப்பட மாட்டாது.

எங்கெங்கு ஒரு திறந்த சாக்கடை மூடு சாக்கடையுடன் சேர்க்கப்பட்டாலும் அந்த திறந்த சாக்கடை இணைக்கப்படும் இடங்களுக்கு சற்று மேலாக திறந்த சாக்கடையின் இறுதியில் ஒரு பொறி அமைக்க வேண்டும்.

மழைத் தண்ணீர் முதலியன சாக்கடையுடன் சேராமல் தடுக்க அவசியமான அவ்வுயரத்தில் தடைகள் போட்டு தடுத்திருக்க வேண்டும். மாநகராட்சி பொறியர் குறிப்பிடும் வகையிலும் அவ்வித சாக்கடைகள் குறிப்பிடப்படும் பொருட்களாலும் தக்க முறையில் அமைக்கப்பட்டால் அது போதுமானது.

41. வீட்டு சாக்கடை ஒவ்வொன்றிற்கும் ஒரு பொறியும், வண்டல் வடிகட்டியும் மாநகராட்சி பொறியர் குறிப்பிடும் வகையிலும் இடங்களிலும் வைக்கப்பட வேண்டும்.

42. ஒரு கட்டிடத்தின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்பவர் அக்கட்டிடத்திலுள்ள சாக்கடை சம்பந்தமாக எல்லா குழாய்கள், பொறிகள் முதலியவைகளை எளிதில் மாநகராட்சி ஆணையாளர்/ பொறியாளர்/ அலுவலர் பார்வையிட எல்லாவித ஏற்பாடுகள் செய்து தர வேண்டும்.

43. ஒருவர் ஒரு கட்டிடத்தில் புதியதாக சாக்கடை அமைக்கவோ (அ) ஏற்கனவே உள்ள சாக்கடைகளை மாற்றி அமைக்கவோ விரும்பினால் அது குறித்து மாநகராட்சி ஆணையருக்கு 30 நாட்களுக்கு முன்னதாகவே ரூ.100/– செலுத்தி விண்ணப்ப படிவம் பெற்று உரிய வரைபடத்துடன் சமர்ப்பித்து ஒப்புதல் பெற்று பின்னர் பணிகள் தொடங்கப்பட வேண்டும்.

44. மேலே சொல்லியுள்ள துணை விதியின்படி கொடுக்கப்படும் விண்ணப்பம் மற்றும் வரைபடத்தில் ஏதேனும் மாற்றம் மாநகராட்சிப் பொறியாளரால் அறிவுறுத்தப்படின் அம்மாற்றங்களை உள்ளடக்கி வேறு வரைபடம் சமர்ப்பிக்க வேண்டும். ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தின் நகலை வேலை நடக்கும் இடங்களில் வைத்திருக்க வேண்டும்.

45. அங்கீகாரம் பெற்றபின் சாலைகள், தெருக்களில் இறுதியாக இணைக்கப்பட வேண்டிய சாக்கடை முதலியவைகளில் செய்ய வேண்டிய வேலைகளைத் தவிர்த்து மற்ற வேலைகள் யாவையும் விண்ணப்பதாரர் செய்யலாம். மாநகராட்சி பொறியாளரால் அங்கீகாரம் பெற்ற மூன்று தினங்களுக்குள் வேலை துவக்கப்பட வேண்டும்.

46. மாநகராட்சி அலுவலர்களைத் தவிர வேறு எவரும் சாக்கடைகள் சம்பந்தப்பட்ட எந்த ஒரு பணியையும் மாநகராட்சி ஆணையர் அனுமதியின்றி செய்யக்கூடாது.

47. சாக்கடைகள் கட்டுபவர்/ சாக்கடைகளை மாற்றி அமைப்பவர் (அ) சாக்கடையை சார்ந்த யாதொரு வேலையையும் செய்யும் ஒவ்வொருவரும் திறந்த சாக்கடைகள் அவைகளின் அஸ்திவாரம் துணைக் கருவிகள் முதலியவைகளை ஏற்பாடு செய்வதற்கு முன்னர் மாநகராட்சி பொறியர்க்கு அவைகளைப் பற்றி எழுதி, அவைகள் பரிசோதனைக்குத் தயாராக இருக்கின்றன என்றும் அவைகள் எந்த நாளைக்கு எத்தனை மணிக்கு ஒடுடப்படும் என்பதையும் குறிப்பிட்டு எழுத்து மூலமாக ஓர் மாநகராட்சி எல்லைக்குள் இருக்கும் குடியிருப்பு, தங்கும் விடுதி, வியாபார நிறுவனங்களிலிருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் கழிவகங்களில் உபகரணங்கள் அமைத்தல் மற்றும் கழிவுநீர் இணைப்புகள் பெறுதல் ஆகியவற்றிற்கு வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர கட்டணம் / சேவை கட்டணம் (Service Charge) கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

**<u>வைப்புத் தொகை மற்றும் பாதாளச் சாக்கடை இணைப்புக்கான மாதாந்திர கட்டணம்</u>**

| வ. எண் | கட்டிடத்தின் தன்மை | வைப்புத் தொகை | பாதாளச் சாக்கடை இணைப்புக்கான மாதாந்திர கட்டணம் |
|---|---|---|---|
| 1. | குடியிருப்பு | 3000/– | ரூ.60/– |
| 2. | வணிக உபயோகம் | 7500/– | ரூ. 150/– |
| 3. | தொழிற்சாலை | 10000/– | ரூ.200/– |

100 மிமீ உள்ளிட்ட பாதாளச்சாக்கடை இணைப்புக்குரிய அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட தொகையினை செலுத்தவும், 150 மி.மீ. உள்விட்ட பாதாளச் சாக்கடை இணைப்புக் குழாய் அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 50% கூடுதலாக சேர்த்து செலுத்தவும், 250 மி.மீ. உள்விட்ட பாதாள சாக்கடை இணைப்பு குழாய் அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 100% கூடுதலாக சேர்த்து செலுத்தப்பட வேண்டும். மேலும் வீட்டு இணைப்பிலிருந்து Man Hole வரையில் கூடுதல் விட்ட குழாயினை பாதாளச் சாக்கடை இணைப்பு பெறுபவர்களே அமைத்துக் கொள்ள வேண்டும். இதற்கான சாலை சீரமைப்புக் கட்டணமும், மேற்பார்வை கட்டணமும் கூடுதலாக பாதாளச் சாக்கடை இணைப்பு பெறுபவர்களால் மாநகராட்சியில் செலுத்தப்பட வேண்டும் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் இத்திட்டம் முழுமையாக முடிவுறும் நிலையில் எதிர்பார்க்க படுகிற திட்ட மதிப்பீடு ரூ.84 கோடி என உயர்வடையும் நிலையில் கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறும், வழிகாட்டு நெறிமுறைகளின்படியும், கீழ்காணும் அட்டவனைப்படி தொகை செலுத்தப்பட வேண்டும்.

| வ. எண் | கட்டிடத்தின் தன்மை | வைப்புத் தொகை | பாதாளச் சாக்கடை இணைப்புக்கான மாதாந்திர கட்டணம் |
|---|---|---|---|
| 1. | **குடியிருப்புகள் (தனது சொந்த உபயோகத்திற்கு மட்டும்)** | | |
| அ. | கட்டிட பரப்பளவு 500 சதுர அடிக்குட்பட்டது | ரூ.4000/– | ரூ.75/– |
| ஆ. | கட்டிட பரப்பளவு 501 முதல் 1200 சதுர அடி முடிய | ரூ.5000/– | ரூ.90/– |
| இ. | கட்டிட பரப்பளவு 1201 முதல் 2400 சதுர அடி முடிய | ரூ.6000/– | ரூ.110/– |
| ஈ. | 2401 சதுர அடிக்கு மேல் | ரூ.7000/– | ரூ.130/– |

100 மிமீ உள்ளிட்ட பாதாளச்சாக்கடை இணைப்புக்குரிய அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட தொகையினை செலுத்தவும், 150 மி.மீ. உள்விட்ட பாதாளச் சாக்கடை இணைப்புக் குழாய் அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 50% கூடுதலாக சேர்த்து செலுத்தவும், 250 மி.மீ. உள்விட்ட பாதாள சாக்கடை இணைப்பு குழாய் அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 100% கூடுதலாக சேர்த்து செலுத்தப்பட வேண்டும். மேலும் வீட்டு இணைப்பிலிருந்து Man Hole வரையில் கூடுதல் விட்ட குழாயினை பாதாளச் சாக்கடை இணைப்பு பெறுபவர்களே அமைத்துக் கொள்ள வேண்டும். இதற்கான சாலை சீரமைப்புக் கட்டணமும், மேற்பார்வை கட்டணமும் கூடுதலாக பாதாளச் சாக்கடை இணைப்பு பெறுபவர்களால் மாநகராட்சியில் செலுத்தப்பட வேண்டும்.

மேலும் ஒன்றுக்கு மேற்பட்ட வீடுகள் வாடகை குடியிருப்பாக பயன்படுத்தும் பட்சத்திலும், அடுக்குமாடி குடியிருப்பில் உள்ள ஒவ்வொரு குடியிருப்புகளுக்கும் (முதல் தளம் மற்றும் இதர தளங்கள் உட்பட) அனைத்து குடியிருப்புக்கும் தனித்தனியாக மேற்கண்டவாறு ஒவ்வொரு குடியிருப்பிற்கும் வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

**2) காலிமனைகள்**

காலிமனைகள் உள்ளவர்கள் பாதாளச் சாக்கடை இணைப்பிற்கு முதல் கட்டமாக கீழ்க்கண்டவாறு குறைந்த பட்ச வைப்புத் தொகை செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| வீட்டு உபயோகத்திற்கு | – | ரூ.5000/– |
| வணிக உபயோகத்திற்கு | – | ரூ.15000/– |
| தொழிற்சாலை உபயோகத்திற்கு | – | ரூ.20000/– |

காலிமனைகளில் வருங்காலங்களில் அமைக்கப்படும் பயனீட்டிற்கு தக்கவாறு வருங்காலங்களில் பாதாளச் சாக்கடை இணைப்புக்கான வைப்புத் தொகை மற்றும் மாதாந்திர கட்டணம் செலுத்தப்பட வேண்டும்.

**3) பள்ளிக் கட்டிடங்கள்**

| வ. எண் | கட்டிடத்தின் தன்மை | வைப்புத் தொகை | பாதாளச் சாக்கடை இணைப்புக்கான மாதாந்திர கட்டணம் |
|---|---|---|---|
| அ) | கட்டிட பரப்பளவு 500 சதுர அடிக்குட்பட்டது | ரூ.8000/– | ரூ.140/– |
| ஆ) | கட்டிட பரப்பளவு 501 முதல் 1200 சதுர அடி முடிய | ரூ.15000/– | ரூ.160/– |

| | | | |
|---|---|---|---|
| இ) | 1201 முதல் 2400 சதுர அடி முடிய | ரூ.18000/– | ரூ.220/– |
| ஈ) | 2400 சதுர அடிக்கு மேல் | ரூ.35000/– | ரூ.300/– |

100 மிமீ உள்ளிட்ட பாதாளச்சாக்கடை இணைப்புக்குரிய அமைக்கும் பட்சததில் மேற்கண்ட தொகையினை செலுத்தவும், 150 மி.மீ. உள்விட்ட பாதாளச் சாக்கடை இணைப்புக் குழாய் அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 25% கூடுதலாக சேர்த்து செலுத்தவும், 250 மி.மீ. உள்விட்ட பாதாள சாக்கடை இணைப்பு குழாய் அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 50% கூடுதலாக சேர்த்து செலுத்தப்பட வேண்டும். மேலும் பள்ளிக்கூட இணைப்பிலிருந்து Man Hole வரையில் கூடுதல் விட்ட குழாயினை பாதாளச் சாக்கடை இணைப்பு பெறுபவர்களே அமைத்துக் கொள்ள வேண்டும். இதற்கான சாலை சீரமைப்புக் கட்டணமும், மேற்பார்வை கட்டணமும் கூடுதலாக பாதாளச் சாக்கடை இணைப்பு பெறுபவர்களால் மாநகராட்சியில் செலுத்தப்பட வேண்டும்.

**4) தொழிற்சாலைகள் மற்றும் வணிக உபயோக கடைகள்**

| வ. எண் | கட்டிடத்தின் தன்மை | வைப்புத் தொகை | பாதாளச் சாக்கடை இணைப்புக்கான மாதாந்திர கட்டணம் |
|---|---|---|---|
| அ) | கட்டிட பரப்பளவு 500 சதுர அடிக்குட்பட்டது | ரூ.8000/– | ரூ.140/– |
| ஆ) | கட்டிட பரப்பளவு 501 முதல் 1200 சதுர அடி முடிய | ரூ.15000/– | ரூ.160/– |
| இ) | 1201 முதல் 2400 சதுர அடி முடிய | ரூ.18000/– | ரூ.220/– |
| ஈ) | 2400 சதுர அடிக்கு மேல் | ரூ.35000/– | ரூ.300/– |

100 மிமீ உள்ளிட்ட பாதாளச்சாக்கடை இணைப்புக்குரிய அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட தொகையினை செலுத்தவும், 150 மி.மீ. உள்விட்ட பாதாளச் சாக்கடை இணைப்புக் குழாய் அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 50% கூடுதலாக சேர்த்து செலுத்தவும், 250 மி.மீ. உள்விட்ட பாதாள சாக்கடை இணைப்பு குழாய் அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 75% கூடுதலாக சேர்த்து செலுத்தப்பட வேண்டும். தொழிற்சாலைகள் மற்றும் கடைகளில் வெளிப்படுத்தப்படும் கழிவுகள், எண்ணெய், சோப் உள்ளிட்ட பொருட்களை பாதாளச் சாக்கடை இணைப்புகளில் சேர்க்கப்படக் கூடாது.

மேலும் Pollution மாசு மற்றும் சுற்றுப்புற சூழல் ஏற்படும் வகையில் பாதாளச் சாக்கடையில் வெளிப்படுத்தும் கழிவுநீர் வேளாண்மை உபயோகத்திற்கு Indian Standard Specification படி தெரிவிக்கப்பட்ட அளவுகோலுக்குட்பட்டு கழிவுநீரினை பாதாளச் சாக்கடை இணைப்பில் விடப்பட வேண்டும். பாதுகாப்பற்ற கழிவுநீரினை பாதாளச் சாக்கடையில் விடும் பட்சத்தில் மறு அறிவிப்பின்றி பாதாள சாக்கடை இணைப்பு துண்டிக்கப்படும். மேற்கூறியபடி கழிவுநீரினை சுத்தம் செய்யும் கட்டுமான வடிவமைப்புகள் மற்றும் இதர வேதியியல் மாற்ற வடிவமைப்பு உபகரணங்களுடன் கழிவுநீரினை சுத்தம் செய்து பாதாள சாக்கடை இணைப்புடன் இணைக்கப்பட வேண்டும். சில்ட் தொட்டிகள் இணைப்பு பகுதியில் 1 மீட்டர் ஆழத்திற்குட்பட்டு இருக்கும் வகையில் உரிய முழு கவருடன் அமைக்கப்பட வேண்டும். மேலும் தொழிற்சாலைகள் மற்றும் வணிக உபயோக கடைகள் இணைப்பிலிருந்து (Man hole) வரையில் கூடுதல் விட்ட அடி குழாயினை பாதாளச் சாக்கடை இணைப்புதாரர்களே அமைக்கப்பட வேண்டும். இதற்கான சாலை சீரமைப்புக் கட்டணமும், மேற்பார்வை கட்டணமும் கூடுதலாக பாதாளச் சாக்கடை இணைப்பு பெறுபவர் மாநகராட்சியில் செலுத்தப்பட வேண்டும்.

**5) டீ கடை, சிறிய உணவு விடுதிகள் மற்றும் இதர விடுபட்ட பயன்பாடுகள்**

| வ. எண் | கட்டிடத்தின் தன்மை | வைப்புத் தொகை | பாதாளச் சாக்கடை இணைப்புக்கான மாதாந்திர கட்டணம் |
|---|---|---|---|
| அ) | டீ கடை மற்றும் சில்லறை கடைகள் | ரூ.4000/– | ரூ.75/– |
| ஆ) | கட்டிட பரப்பளவு (பெரிய கடைகள் மற்றும் சில்லறை கடைகள்) 500 சதுர அடிக்குட்பட்டது | ரூ.8000/– | ரூ.140/– |
| இ) | கட்டிட பரப்பளவு 501 முதல் 1200 சதுர அடி முடிய | ரூ.15000/– | ரூ.160/– |
| ஈ) | 1201 முதல் 2400 சதுர அடி முடிய | ரூ.18000/– | ரூ.220/– |
| உ) | 2400 சதுர அடிக்கு மேல் | ரூ.35000/– | ரூ.300/– |

**6) மத்திய, மாநில அரசு குடியிருப்புகள்**

| | | வைப்புத்தொகை | மாதாந்திர கட்டணம் |
|---|---|---|---|
| குடியிருப்புகள் (அனைத்து வகைகளுக்கும்) | – | ரூ. 4000/– | ரூ.75/– |
| வணிக கடைகள் | – | ரூ. 8000/– | ரூ.140/– |

**7) மத்திய, மாநில அரசு அலுவலகங்கள், ஆஸ்பத்திரிகள் உள்ளிட்ட இதர பயன்பாட்டு கட்டிடங்கள்**

| | வைப்புத்தொகை | மாதாந்திர கட்டணம் |
|---|---|---|
| அலுவலகம் மற்றும் இதர பயன்பாட்டுக் கட்டிடங்கள் | ரூ.18000/– | ரூ.220/– |

**8) கோயில்கள், மசூதிகள், சர்ச்கள் மற்றும் இதர வழிபாட்டு இடங்கள்**

| | வைப்புத்தொகை | மாதாந்திர கட்டணம் |
|---|---|---|
| கோயில்கள், மசூதிகள், சர்ச்கள் மற்றும் இதர வழிபாட்டு இடங்கள் | – ரூ.4000/– | – ரூ.75/– |

மத்திய மாநில அரசு குடியிருப்புகள், அலுவலக கட்டிடங்கள் கோயில்கள், மசூதிகள், சர்ச்கள் மற்றும் இதர வழிபாட்டு கட்டிடங்கள், பாதாளச் சாக்கடை இணைப்புகளுக்கான குழாய் 150 மி.மீ. 250மி.மீ. விட்ட பைப்புகள் அவர்கள் சொந்த செலவில் Man hole வரை இணைக்கப்பட வேண்டும். இதற்கான சாலை சீரமைப்புக் கட்டணம் மற்றும் மேற்பார்வைக் கட்டணம் மாநகராட்சிக்கு தனியே செலுத்தப்பட வேண்டும். 100 மி.மீ. உள்ளிட்ட பாதாளச் சாக்கடை இணைப்பு குழாய் அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட தொகையினை செலுத்தவும் 150 மி.மீ. உள்விட்ட பாதாளச் சாக்கடை இணைப்பு அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 50% கூடுதலாக சேர்த்தும் செலுத்தவும், 250 மி.மீ. உள்விட்ட பாதாளச் சாக்கடை அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 100% கூடுதலாக சேர்த்து செலுத்தப்பட வேண்டும். ஓட்டல் திட மற்றும் திரவக் கழிவுகளை பாதாளச் சாக்கடை இணைப்பில் சேர்க்கக் கூடாது. மேலும் Pollution மாசு மற்றும் சுற்றுப்புற சூழல் ஏற்படும் வகையில் பாதாளச் சாக்கடையில் வெளிபடுத்தும் கழிவுநீர் வேளாண்மை உபயோகத்திற்கு Indian Standard Specification படி தெரிவிக்கப்பட்ட அளவுகோலுக்குட்பட்டு கழிவுநீரினை பாதாளச்சாக்கடை இணைப்பில் விடப்பட வேண்டும். பாதுகாப்பற்ற கழிவுநீரினை பாதாளச் சாக்கடையில் விடும் பட்சத்தில் மறு அறிவிப்பின்றி பாதாளச் சாக்கடை இணைப்பு துண்டிக்கப்படும். மேற்கூறியபடி கழிவுநீரினை சுத்தம் செய்யும் கட்டுமான வடிவமைப்புகள்

மற்றும் இதர வேதியியல் மாற்ற வடிவமைப்பு உபகரணங்களுடன் கழிவுநீரினை சுத்தம் செய்து பாதாளச் சாக்கடை இணைப்புடன் இணைக்கப்பட வேண்டும். சில்ட் தொட்டிகள் இணைப்பு பகுதியில் 1 மீட்டர் ஆழத்திற்குட்பட்டு இருக்கும் வகையில் உரிய முழு கவருடன் அமைக்கப்பட வேண்டும். மேலும் இணைப்பிலிருந்து Man Hole வரையில் கூடுதல் விட்ட அடிகுழாயினை பாதாளச் சாக்கடை இணைப்புதாரர்களே அமைக்கப்பட வேண்டும். இதற்கான சாலை சீரமைப்புக் கட்டணமும், மேற்பார்வைக் கட்டணமும் கூடுதலாக பாதாளச் சாக்கடை இணைப்பு பெறுபவர் மாநகராட்சியில் செலுத்தப்பட வேண்டும்.

**<u>தங்கும் விடுதிகள் (Lodges) திருமண மண்டபங்கள், ஆஸ்பத்திரிகள்</u>**

| வ. எண் | கட்டிடத்தின் தன்மை | வைப்புத் தொகை | பாதாளச் சாக்கடை இணைப்புக்கான மாதாந்திர கட்டணம் |
|---|---|---|---|
| அ) | கட்டிட பரப்பளவு<br>500 சதுர அடிக்குட்பட்டது | ரூ.8000/– | ரூ.140/– |
| ஆ) | கட்டிட பரப்பளவு<br>501 முதல் 1200 சதுர அடி முடிய | ரூ.15000/– | ரூ.160/– |
| இ) | 1201 முதல் 2400 சதுர அடி முடிய | ரூ.18000/– | ரூ.220/– |
| ஈ) | 2400 சதுர அடிக்கு மேல் | ரூ.35000/– | ரூ.300/– |

100 மிமீ உள்ளிட்ட பாதாளச்சாக்கடை இணைப்புக்குரிய அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட தொகையினை செலுத்தவும், 150 மி.மீ. உள்விட்ட பாதாளச் சாக்கடை இணைப்புக் குழாய் அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 50% கூடுதலாக சேர்த்து செலுத்தவும், 250 மி.மீ. உள்விட்ட பாதாள சாக்கடை இணைப்பு குழாய் அமைக்கும் பட்சத்தில் மேற்கண்ட கட்டணத்தில் 100% கூடுதலாக சேர்த்து செலுத்தப்பட வேண்டும்.

மேலும் Pollution மாசு மற்றும் சுற்றுப்புற சூழல் ஏற்படும் வகையில் பாதாளச் சாக்கடையில் வெளிப்படுத்தும் கழிவுநீர் வேளாண்மை உபயோகத்திற்கு Indian Stadard Specification படி தெரிவிக்கப்பட்ட அளவுகோலுக்குட்பட்டு கழிவுநீரினை பாதாளச் சாக்கடை இணைப்பில் விடப்பட வேண்டும். பாதுகாப்பற்ற கழிவுநீரினை பாதாளச் சாக்கடையில் விடும் பட்சத்தில் மறு அறிவிப்பின்றி பாதாள சாக்கடை இணைப்பு துண்டிக்கப்படும். மேற்கூறியபடி கழிவுநீரினை சுத்தம் செய்யும் கட்டுமான வடிவமைப்புகள் மற்றும் இதர வேதியியல் மாற்ற வடிவமைப்பு உபகரணங்களுடன் கழிவுநீரினை சுத்தம் செய்து பாதாள சாக்கடை இணைப்புடன் இணைக்கப்பட வேண்டும். சில்ட் தொட்டிகள் இணைப்பு பகுதியில் 1 மீட்டர் ஆழத்திற்குட்பட்டு இருக்கும் வகையில் உரிய முழு கவருடன் அமைக்கப்பட வேண்டும். மேலும் இணைப்பிலிருந்து (Man hole) வரையில் கூடுதல் விட்ட அடி குழாயினை பாதாளச் சாக்கடை இணைப்புதாரர்களே அமைக்கப்பட வேண்டும். இதற்கான சாலை சீரமைப்புக் கட்டணமும், மேற்பார்வை கட்டணமும் கூடுதலாக பாதாளச் சாக்கடை இணைப்பு பெறுபவர் மாநகராட்சியில் செலுத்தப்பட வேண்டும்.

48. மாநகராட்சி சாக்கடையுடன் இணைக்கப்பட வேண்டிய வீட்டின்/ கட்டிடத்தின் சாக்கடைகள் மற்றுமுள்ள அமைப்புகள் யாதொன்றையும் மாநகராட்சி பொறியாளரால் மேற்பார்வையிடப்பட்டு அவைகள் மாநகராட்சியின் சகல விதிகளுக்கும் தேவைக்கும் சரியாக இருக்கிறதென்று உறுதி கூறும் வரை மாநகராட்சி சாக்கடையுடன் இணைக்கக் கூடாது. எழுத்து மூலமாக அவ்வித அத்தாட்சியின் நகலுடன் விண்ணப்பம் வந்த பின்புதான் மாநகராட்சி அனுமதி பெற்ற மாநகராட்சி அலுவலர்களால் அவ்வித இணைப்புகள் கொடுக்கப்படும். மேலும் வீட்டு கழிவுநீர் இணைப்பில் மாசடைந்த நீர் (Polluted Water) செல்வதாக தெரிந்தாலோ அல்லது அதனால் ஏதாவது அடைப்பு ஏற்பட்டாலோ அந்த கழிவுநீர் இணைப்பு துண்டிக்கப்படும்.

49. வீட்டு சாக்கடை முதலியவற்றை மாநகராட்சி சாக்கடையுடன் இணைக்க விரும்பும் நபர் அதற்கான செலவுகளுக்கான தொகையை மாநகராட்சியில் செலுத்த வேண்டும். அத்தொகை எக்காரணத்தை கொண்டும் திருப்பி வழங்கப்படமாட்டாது. மேலும் கழிவு நீர் குழாய் இணைப்பு கொடுக்க வரைபடமும் மதிப்பீடும் சமர்ப்பிக்க வேண்டும். மதிப்பீட்டில் 10 சதவீதம் சென்டேஜ் (Centage) தொகை சாலை சீரமைப்புக் கட்டணம் மற்றும் மேற்பார்வை கட்டணமாக செலுத்தி உத்தரவு பெற்று பின்னர் பணிகள் துவக்கப்பட வேண்டும்.

1. வரைபடம் கீழ்க்கண்ட குறிப்புகளுடன் இருக்க வேண்டும்.

அ) 2 மீட்டருக்கு 1 செ.மீ அளவுள்ளதாக இருக்க வேண்டும்.

ஆ) குறியீட்டு வரைபடம் (Index Plan) 1:10 அளவுள்ளதாக வரைந்து அதில் புதிதாக நிர்ணயிக்கப்படும் சாக்கடைகள் ஆள் இறங்கும் குழிகள் முதலியவைகள் சிகப்பு நிறத்திலும் ஏற்கனவே உள்ளவைகளை மற்றொரு நிறத்திலும் குறிப்பிட வேண்டும். மேலும் தெருவின் பெயர் வீட்டு எண் போன்றவற்றையும் குறிப்பிட வேண்டும்.

இ) புதிதாக வழங்கப்படவிருக்கும் கழிவுநீர் இணைப்பின் குறுக்கு வெட்டு தோற்றம் குறிப்பிட வேண்டும்.

ஈ) மேலும் இணைப்பு கோரும் விண்ணப்பத்துடன் அக்கட்டிடத்திற்கு மாநகராட்சியால் அனுமதிக்கப்பட்ட வரைபடத்துடன் (Approved Building Plan) இணைத்து அனுப்ப வேண்டும்.

2. விண்ணப்பத்துடன் சொத்துவரி விதிப்பு ரசீதின் நகல் அல்லது சொத்து பத்திர நகல் மற்றும் குடிநீர் கட்டணம், சொத்துவரி நிலுவையின்றி செலுத்தப்பட்ட ரசீதின் நகலுடன் விண்ணப்பிக்கப்பட வேண்டும்.

<u>**50. அபராதங்கள்**</u>

மேற்கூறப்பட்ட துணை விதிகளை மீறி நடப்பவர் கீழ்க்காணும் தண்டனைக்கு உள்ளாவார்.

அ) ரூ.1000/– வரையில் அபராதம் விதிக்கப்படும் அல்லது

ஆ) மாநகராட்சி அலுவலரிடமிருந்து அவ்விதம் மீறி நடக்கும் செய்கையை நிறுத்துமாறு அறிக்கை வந்த பின்பும் அதை தொடர்ந்து விதிகளை மீறினால் நாளொன்றுக்கு ரூ.100/– வரையில் கூடுதல் அபராதத்திற்குள்ளாவார்கள்.

மேலே கூறப்பட்ட விதிகளுக்கு மாறாக யாதொரு வேலையையும் துவக்க முற்பட்டால் அவ்வித வேலையை யார் செய்கிறாரோ, யாருக்காக வேலை செய்யப்படுகிறதோ/ அவருக்காக மாநகராட்சி ஆணையர் எழுத்து மூலமாக அறிக்கை கொடுத்து அவ்வமைப்புகளை எடுத்துவிடவோ மாற்றியமைக்கவோ/ இடித்து தள்ளவோ எழுத்து மூலமாக தெரிவிக்க நாள் குறிப்பிட்டு அறிக்கை அனுப்பப்படும்.

அவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ள காலத்திற்குள் ஒரு மனு மூலமாக அவ்வித வேலைகளை எடுத்து விடவோ, மாற்றியமைக்கவோ, இடித்து தள்ளிவிடவோ கூடாதென நிறைவேற்ற அலுவலருக்கு எடுத்துக் காட்டத் தவறினால் அவ்வலுவலர் அவ்வாறு செய்யப்பட்டவைகளை நீக்கிவிடவோ, மாற்றியமைக்கவோ, இடித்துத் தள்ளிவிடவோ உரிமையுண்டு. அத்துடன் அம்மாதிரி மாற்றியமைப்பதற்கு (அ) நீக்குவதற்கு ஆகின்ற செலவுகளை அந்த நபரிடமிருந்தே பெறவும் உரிமையுண்டு.

நிபந்தனைக்கு கட்டுபடாவிடில் துணை விதி 52ல் கூறப்பட்ட நடைமுறையிலுள்ள தண்டனைகளுக்கு உள்ளாவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. இதற்கான செலவினத்தை சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டப்படி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இ.1) பாதாளச் சாக்கடை இணைப்பு எடுத்தவர்கள் இணைப்பிற்கான தொகையை செலுத்திய ரசீதுகளை உரிமை மாற்றம் செய்வதாக இருந்தாலும் மாநகராட்சிக்கு முறையாக விண்ணப்பம் செய்து பெயர் மாற்றம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்ய தவறினால் இணைப்பை முறையற்ற இணைப்பாக கருதி அதற்கு கூடுதலாக ஒரு இணைப்புக் கட்டணம், வைப்புத் தொகை வசூல் செய்யப்படும்.

இ.2) வீட்டின் சொந்தகாரர் கழிவுநீர் சேவை பராமரிப்பு கட்டணம் கட்ட தவறும் பட்சத்தில் மாநகராட்சி ஆணையர் அவர்களால் அறிவிப்பு கொடுக்கப்பட்ட 15 நாட்களுக்குள் கட்ட தவறினால் அபராதக் கட்டணமாக மாதம் ஒன்றிற்கு ரு.25/– செலுத்த வேண்டிய கட்டணத்துடன் சேர்த்து வசூல் செய்யப்படும்.

## <u>பொது விதிகள்</u>

1. எவரும் கழிவுநீர் செல்லும் குழாயின் பாதையில் வேண்டுமென்றோ (அ) அசட்டையாகவோ இணைப்புகளை சேதப்படுத்தக்கூடாது.

2. கழிவுநீர் பாதையில் உள்ள ஆள் நுழையும் துவாரங்களில் உள்ள மூடிகளை எடுத்து செல்லவோ (அ) திருடிச் செல்லவோ கூடாது. இவ்வாறு செய்தால் காவல்துறை மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

3. கழிவுநீர் பாதையில் காற்று வெளியில் செல்வதற்காக வைத்துள்ள காற்று போக்கி குழாய்களையும் அதன் உபகரணங்களையும் சேதப்படுத்தவோ எடுத்து மாற்றியமைக்கவோ கூடாது. அவ்வாறு செய்தால் துணை விதிகளின்படி நடவடிக்கை எடுக்க மாமன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

4. கழிவுநீர் பாதையில் பந்தல் போடுவதற்கு குழி வெட்டுவதோ (அ) கட்டிடம் கட்டுவதற்கு குழிகள் தோண்டவோ கூடாது. இவ்வாறு செய்வதனால் மாநகராட்சியின் முன் அனுமதி பெற்று செய்தல் வேண்டும். மாநகராட்சியின் அனுமதி பெறாமல் செய்தால் அதற்கு அபராதம் ரூ.1000/– வரை விதிக்கப்படும்.

5. கழிவுநீர் குழாயில் அடைப்பு ஏற்பட்டால் உடனே மாநகராட்சி அதிகாரிகளுக்கு தெரியப்படுத்துதல் வேண்டும். இல்லை என்றால் தாமாகவே சாலையை வெட்டி வேறு இடங்களில் தண்ணீர் தேங்குமாறு செய்யக்கூடாது. தவறினால் காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டு நடவடிக்கை தொடரப்படும்.

6. கழிவுநீர் பாதையில் அனுமதித்துள்ள ஆள்நுழையும் துவாரங்களில் மழை வெள்ளம் இதர சாக்கடை இந்த துவாரங்களை உடைத்து உள்ளே செல்லுமாறு செய்தல் கூடாது. இவ்வாறு செய்வது மாநகராட்சியின் அதிகாரிகளின் கவனத்திற்கு வந்தால் கடும் நடவடிக்கை எடுப்பதுடன் ரூ.1000/- வரை அபராதம் விதித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. கழிவுநீர் பாதையில் உள்ள ஆள்நுழையும் துவாரம், காற்று போக்கி வைத்துள்ள இடத்தில் குப்பையை கொட்டி இவைகளை மூடுதல் கூடாது. அவ்வாறு செய்பவர் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதுடன் நாளொன்றுக்கு ரூ.100/– வரை அபராதம் விதிக்கப்படும்.

8. துணை விதிகள் 6(அ)ல் கண்டுள்ள பொருட்கள் அனைத்தும் இணைப்பாளர் செப்பணிடுபவர் கொள்முதல் செய்து அவ்வாறு செய்யப்பட்ட பொருட்களை மாநகராட்சி பொறியாளர்/ஆணையர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் பொருட்களை பார்வையிட்டு பொருட்கள் தர நிர்ணயத்திற்கு உட்பட்ட வகையை சார்ந்ததாக இருப்பின் இணைப்பு கொடுப்பதை நடவடிக்கை தொடர வேண்டும். கழிவுநீர் இணைப்புகளை வீட்டினுள் முழுமையாக பணிகள் முடிவு பெற்ற பின் இணைப்பாளர்/ செப்பணிடுபவர் இதற்காக உள்ள விண்ணப்பப் படிவத்தை பூர்த்தி செய்து மாநகராட்சி பொறியாளர்/ ஆணையர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் பிரதான குழாயிலிருந்து தேவையான அமைப்புகள் பொறுத்தி கழிவு நீர் இணைப்பு வழங்கப்பட வேண்டும். பணிகள் முடிந்தவுடன் பணி முடிவு சான்றிதழ் அங்கீகாரம் பெற்றவரால் கையொப்பம் இட்டு மாநகராட்சிக்கு கொடுக்க வேண்டும்.

9. கழிவுநீர் இணைப்புகளில் பழுது ஏற்பட்டாலோ (அ) கசிவு ஏற்பட்டாலோ பழுதடைந்த குழாய்களை மாற்ற வேண்டியிருந்தாலோ (அ) நீடிப்பு செய்யும் பணிகளாக இருந்தாலோ பணிகளை மேற்கண்ட துணை விதிகளுக்கு உட்பட்டு நடைமுறையை பின்பற்றி செய்யாமலும் புதிய பணிகள் / நீடிப்பு பணிகள்/ மாற்றம் செய்யும் பணிகள்/ செப்பணிடுதல் பணிகளை மாநகராட்சிக்கு தெரிவிக்காமல் செய்யப்பட்டாலும் பின்னர் தெரிய வந்தால் உரிமத்தை ரத்து செய்து வைப்பு தொகையை பறிமுதல் செய்து மேல் நடவடிக்கை தொடரப்படும்.

10. கழிவுநீர் இணைப்பு /பழுது பார்த்தல் பணிகளை செய்யும் ஒவ்வொருவரும் கழிவுநீர் இணைப்பு வழங்கும்போது அதில் மாமன்றத்தால் கொடுக்கப்பட்டுள்ள விவரங்களை அனைத்தையும் பதிவு செய்து உரிய அங்கீகாரம் பெற்ற அதிகாரிகளால் ஆய்வு செய்யப்படும். இந்த பதிவு செய்த புத்தகத்தை ஒவ்வொரு வாரமும் மாநகராட்சிக்கு அனுப்பி உரிய கையொப்பம் பெறப்பட வேண்டும்.

11. பயன்படுத்தப்படும் எல்லா பொருட்களையும் பயன்படுத்தி இருக்கும் எல்லா பொருட்களும் நிறைவேற்றப்பட்ட எல்லா பணிகளும் மாநகராட்சி பொறியாளர்/ ஆணையர் அவர்களால் அங்கீகாரம் பெறப்பட்ட அதிகாரிகள் மேற்பார்வையிடப்படுவதற்கும் ஒப்புதல் அளிக்கப்படுவதற்கும் (அ) வழங்கப்படுவதற்கும் உட்பட்டதாகும்.

12. கழிவுநீர் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பைப்புகள், ஒய் பெண்டுகள், டிராப், மற்றும் இதர பொருட்களும் மாநகராட்சி அலுவலகத்தில்/ பண்டகசாலைகளில் வைத்துள்ள அரசு தர நிர்ணய கட்டுப்பாட்டு நிலையம் அங்கீகரித்துள்ள மாதிரிகளைச் சார்ந்ததா இருக்க வேண்டும். இணைப்பில் பயன்படுத்தப்படும் விஷேச சாதனங்கள் பெண்டு, டிராப் முதலியன (அ) இது போன்று தேவைப்படும் இதர பகுதிகள் எவையும் மாமன்றம் அங்கீகாரம் பெற்ற அதிகாரிகளால் ஒப்புதல் அளிக்கப்பட்டவை இன்றி பயன்படுத்தக்கூடாது.

13. ஒரு கட்டிடத்திற்கு/ குடியிருப்புக்கு இணைக்கப்பட்டுள்ள கழிவுநீர் இணைப்பு நிறுத்தப்பட வேண்டும் (அ) திரும்ப இணைக்கப்பட வேண்டும் என்றாலோ இணைப்பாளர்/ செப்பணிடுபவர் மாநகராட்சி பொறியாளர்/ ஆணையர் அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பத்தை செய்து தர வேண்டும். அவ்வாறு இன்றி உரிமம் பெற்ற எவரும் கழிவுநீர் இணைப்பில் தலையீடு செய்தல் கூடாது.

14. கழிவுநீர் இணைப்பு/ செப்பணிடுதல் செய்பவர் இந்த துணை விதிகளில் அல்லது ஒழுங்கு விதியை பின்பற்றாமல் இருந்தாலும் மீறி நடந்தாலும் (அ) மாமன்றத்தின் முறைப்படி அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரியின் உத்திரவிற்கு கீழ்ப்படிய மறுத்தாலும் (அ) அவரது பணி திருப்திகரமாக இல்லை என்று நிர்வாக அதிகாரி/ ஆணையர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டால் அவருடைய உரிமம் ரத்து செய்வதுடன் அபராதமும் விதித்து மேல் நடவடிக்கை தொடரப்படும்.

15. கழிவுநீர் இணைப்பு/ பழுது பார்த்தல்/ நீட்டித்தல் மற்றும் இதர மராமத்து பணிகள் செய்ய கொடுக்கப்படும் மதிப்பீடு இத்துணை விதிகளின்படியும் இதர சட்டத்திற்கு இணங்க இருக்கப்பட வேண்டும்.

16) பாதாள சாக்கடை கழிவுநீர் இணைப்பு வழங்குவதற்கு முன்னர் வேளாண்மை பயனீட்டிற்கு பயன்படுத்தும் வகையில் கழிவுநீரில் மாசுபடியாத கழிவுநீர்களை சுத்தம் செய்து இணைக்கப்பட வேண்டும். கழிவுநீரின் குணாதிசயம், Physical, Chernical, Bacteriolugical and Viorlogical Quality standard for Agricultural use தக்கவாறு சுத்தம் செய்து இதர கழிவுநீர்கள் மாசு படியாதவாறும், மாநகராட்சியால் கழிவுநீரினை சுத்தம் செய்யும் பணிக்கு குந்தகம் ஏற்படாதவாறு கழிவுநீரினை இணைக்கப்பட வேண்டும்.

## <u>தண்டனை</u>

இந்த துணை விதிகளை மீறி நடப்பவர் யாராக இருந்தாலும் மேலும் குழந்தையாக இருந்தாலும் அந்த குழந்தைகளை அவ்வாறு செய்யாமல் தடுக்க வேண்டும். தவறினால் ரூ.100/— வரையிலும் அபராதம் விதிக்கப்படுவதுடன் மேற்சொன்ன துணை விதிகளை தொடர்ந்து மீறப்படுமேயானால் ரூ.100/— தொடர் அபராதம் விதிக்கப்படுவதுடன் காவல்துறை மூலமும் சட்டபடியும் நடவடிக்கை தொடரப்படும்.

## <u>இணைப்பு பெறுவதற்கான விண்ணப்பம்</u>

### <u>படிவம்—அ</u>

பெறுநர்

மாநகராட்சி ஆணையர்
தூத்துக்குடி மாநகராட்சி.

அய்யா,

கீழ்க்குறிப்பிட்டுள்ள கட்டிடத்தின் உரிமையாளர்/குடியிருப்பாளர் ஆகிய நான், வார்டில் தெருவில் அமைந்திருக்கும் கதவிலக்கம் உள்ள குடியிருப்புக்கு பாதாள சாக்கடை இணைப்பு வழங்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

துணை விதிகளில் குறிப்பிட்டுள்ள வைப்புத் தொகை, மற்றும் சேவை பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றை செலுத்த ஒப்புக் கொள்கிறேன். இதற்காக பொருத்தப்படும் உபகரணங்களின் பராமரிப்பையும் அதற்குரிய கட்டணத்தையும் செலுத்த சம்மதிக்கிறேன்.

இணைப்பு: சொத்துவரி மற்றும் தண்ணீர் வரி
செலுத்திய ரசீது நகல்கள்

இப்படிக்கு,
வீட்டின் உரிமையாளர்/குடியிருப்பவர்

**<u>அலுவலகக்குறிப்பு :</u>**

1) பாதாளச் சாக்கடை இணைப்புக்கான துணை விதிகளை ஒப்புதல் வழங்கலாம்.
2) துணை விதிகளை மாவட்ட அரசிதழில் விளம்பரப்படுத்தவும், அதற்கான செலவினத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

3) அரசாணைப்படியும், Tamil Nadu Urban Infrastructure Financial Serivice Ltd., சென்னை, அவர்களின் ஒப்பந்தத்தின்படி பொது மக்களின் பங்குத்தொகையினை திட்ட மதிப்பீட்டில் உள்ள தொகைக்கு வசூல் செய்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினருக்கு செலுத்த வேண்டியுள்ளதால் பாதாளச் சாக்கடைக்கான துணை விதிகளில் அங்கீகரிக்கப்படும் வைப்புத் தொகையினை பொதுமக்களிடமிருந்தும், வரிவிதிப்பாளர்களிடமிருந்தும் வசூல் செய்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த மன்றம் அனுமதி வழங்கலாம்.

இ3/11512/07–L

**<u>தீர்மானம் எண்: 101</u>**

அலுவலகக் குறிப்பு 1 ஒப்புதல் வழங்கப்பட்டது. அலுவலகக் குறிப்பு 2 மற்றும் 3 அனுமதி வழங்கப்பட்டது

26.தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண்.20, லயன்ஸ் டவுண் 4வது தெருவில் கட்டப்பட்டுள்ள, சகாய மாதா ஆலயத்திற்கு பாத்தியப்பட்ட புனித வளனார் ஜெபவழிபாட்டு கட்டிடம் முற்றிலுமாக ஜெபவழிபாட்டிற்காக மட்டும் பயன்படுத்தப்பட்டு வருவதால் மேற்படி கட்டிடத்திற்கு கதவு எண். 342 கே/1 என வழங்கவும் சொத்து வரிவிதிப்பிலிருந்து விலக்கு அளிக்கவும் கோரப்பட்டுள்ளது.

வருவாய் ஆய்வாளர் மற்றும் வருவாய் உதவியாளர் நேரடியாக பார்வையிட்டு 22–5–09ம் தேதி அளித்த குறிப்பின்படி மேற்படி கட்டிடம் 35 X 22 என்ற அளவில் 770 சதுர அடி அளவுள்ள கட்டிடம் ஜெப வழிபாட்டு கட்டிடமாக மட்டும் பயன்படுத்தப்பட்டு வருவதால் மேற்படி கட்டிடத்திற்கு கதவு எண். 342கே/1 என வழங்கவும், சொத்துவரிவிதிப்பிலிருந்து விலக்க அளிக்கவும் பரிந்துரை செய்துள்ளார்கள்.

எனவே தூத்துக்குடி மாநகராட்சி வார்டு எண். 20, லயன்ஸ் டவுண் 4வது தெருவில் கட்டப்பட்டுள்ள சகாயமாதா ஆலயத்திற்கு பாத்தியப்பட்ட புனித வளனார் ஜெபவழிபாட்டு கட்டிடம் முற்றிலுமாக ஜெபவழிபாட்டு தலமாக பயன்படுத்தப்பட்டு வருவதால் மேற்படி கட்டிடத்திற்கு கதவு எண் 342கே/1 என வழங்கவும் சொத்துவரி விலக்கு அளிக்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –** தூத்துக்குடி மாநகராட்சிக்கு பொருந்தக்கூடிய கோவை மாநகராட்சி சட்டவிதி எண்.123 (a) ன் படி மேற்படி கட்டிடத்திற்கு கதவு எண் **342**கே/**1** என வழஙகவும் **770** சதுர அடி அளவுள்ள கட்டிடத்திற்கு மட்டும் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்கலாம்.

அ**8/27481/08**

**<u>தீர்மானம் எண்: 102</u>**

அலுவலகக் குறிப்புப்படி 770 சதுரடி அளவுள்ள கட்டிடத்திற்கு மட்டும் சொத்துவரி விதிப்பிலிருந்து விலக்களிக்கவும் மேற்படி கட்டிடத்திற்கு கதவு எண் 342கே/1 என வழங்கவும் அனுமதிக்கப்பட்டது.

மாமன்றம், தூத்துக்குடி.
நாள் **22–05–2009**

மேயர்
மாமன்றம், தூத்துக்குடி